விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 25 திங்கட்கிழமை (08.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 051

# வழக்குகளை துரிதப்படுத்தியே அரசியல் கைதிகளுக்கு விடுதலை

## பொது மன்னிப்பை வழங்க முடியாது என ஐ.நா. ஆணையாளர் ஹுசைன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்) தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச கொள்கைகளின்படி ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே அவர்கள் மீதான வழக்குகளை துரிதப்படுத்தி விடுதலை செய்வதே சிறந்தது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் ஹுசைன் தெரிவித்ததாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### முதலமைச்சருடனான சந்திப்பின்போது

## காணாமல்போனோரின் விபரங்கள் ஐ.நா. ஆணையாளரிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் படையினரால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் என நான்காயிரம் பேரினது விபரங்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களினால் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் 24ஆம் பக்கம் பார்க்க....

## கவனயீர்ப்பை கண்டவுடன் இறங்கி வந்த ஹுசைன்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தை கண்டவுடன் தமது வாகனத்தை விட்டு கீழிறங்கிய மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் அவர்களோடு கலந்துரையாடியுள்ளார்.

ஆணையாளரின் இந்த பெருந்தன்மையான செயலால் அங்கிருந்தவர்கள் நெகிழ்வடைந்தனர்.

நேற்றையதினம் யாழ்ப்பாணம் வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை 24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா.ஆணையாளருக்கு பலத்த பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. விசேட அதிரடிப் 24ஆம் பக்கம் பார்க்க....

## முகாம்களிலுள்ள மக்கள் அனைவரும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவர்


### அடுத்த வருகைக்கு முன் இது நடக்கும் என ஹுசைன் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

நான்யாழ்ப்பாணத்திற்கு அடுத்த தடவை வரும்போது நலன்புரிமுகாம்களில் தங்கியுள்ள மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறி இருப்பார்கள் என நேற்றையதினம் யாழப்பாணம் வருகை தந்த ஐக்கியநாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கை வருகை தந்துள்ள ஐக்கியநாடுகள் சபையின் மனித வுரிமை ஆணையாளர், நேறறையதனம் சுன்னாகம் சபாபதிப்பிளளை முகாம்களில் தங்கியுள்ள இம 24ஆம் பக்கம் பார்க்க....

### பெருந்திரளான மக்கள் கூட்டம்

# பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு மட்டக்களப்பில் நேற்று வெளியீடு






(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழு தயாரித்த தீர்வுத்திட்ட முன் வரைபை கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் முன்னிலையில் வெளியிட்டு வைக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11.00 மணியளவில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தாண்டவன்வெளியிலுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் பேரவையின் இணைத் தலைவர் 23ஆம் பக்கம் பார்க்க....

# இந்திய மீனவர் படகுகளை திருப்பிக் கொடுக்க முடியாது

## அமை. மகிந்த அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் பறிமுதல் செயயப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் மீன்பிடி வள்ளங்களும் உபகரணங்களும் எக்காரணம் கொண்டும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்திற்கு சென்றிருந்த அமைச்சர் மகிந்த அமரவீர, மட்டக்களப்பு தருமபுரத்தில் கடல் வாழ் மீன்குஞ்சுகள் இனப் பெருக்க பண்ணைக்கான வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே இதனை தெரிவித்துள்ள அவர், வடமாகாண கடலில் இந்திய மீனவர்களின் சட்ட விரோத மீன்பிடியினால் உள்நாட்டு மீன் வளம் அழிக்கப்படுவது மட்டுமன்றி சுற்றாடலுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்த இந்திய மத்திய அரசு தலையீடு செய்ய வேண்டும் அல்லது ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் இது பற்றி பேச வருமாறு இந்திய மத்திய அரசு அழைப்பும் விடுத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் மீனவர்களின் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் பின் நிற்கப்போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை நீக்கம் பற்றிய நல்ல செய்தியை எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக எதிர்பார்க்க முடியும் என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர நம்பிக்கையும் வெளியிட்டார்

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், மாகாண அமைச்சர் கே. துரைராஜசிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (செ-12)

# ஐ.நாவின் பரிந்துரைகளில் பிரிட்டன் இரட்டைப் போக்கு!

## கோத்தபாய கண்டிப்பு

ஐ.நா. சபையின் பரிந்துரையை நிராகரிக்கும் பிரித்தானியா, இலங்கையை மாத்திரம் ஐக்கிய நாடுகளின் பரிந்துரையை ஏற்கக் கூறுவதில் என்ன நியாயம் என்று இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

சுவீடனின் பாலியல் வன்புணர்வு குற்றம் தொடர்பில் தேடப்படும் விக்கிலீக்ஸ் தலைவர் ஜுலியன் அசாஞ்சியை பிரித்தானியா கைது செய்ய காத்திருக்கும் நிலை தொடர்பிலேயே கோத்தபாய கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த செயற்பாட்டின் மூலம் பிரித்தானியாவின் இரட்டைக் கொள்கை வெளியாகியுள்ளதாக அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தாம் கைது செய்யப்பட்டு சுவீடனுக்கு நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அசாஞ்சி அடைக்கலம் பெற்றுள்ளார்.

இந்தநிலையில் அதனை நியாயமற்ற தடுத்து வைப்பு என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் இதனை ஏற்றுக் கொள்ளாத பிரித்தானியா, அசாஞ்சியை கைது செய்து சுவீடனுக்கு அனுப்பவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது இலங்கையில் ஐக்கிய நாடுகளின் பரிந்துரையை ஏற்கச் சொல்லும் பிரித்தானியா, தமது நாட்டில் ஐக்கிய நாடுகளின் பரிந்துரையை செயறபடுத்தாத நிலையை தெளிவாக காட்டுகிறது என்று கோத்தபாய சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

# குருநாகல் விகாரையில் மகிந்த திடீர் வழிபாடு


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று குருநாகல் யாபஹுவ பிரதேச விகாரையொன்றில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

தனது இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஷ பெரும்பாலும் கொழும்பை விட்டு வெளியில் செல்லவில்லை.

இந்த நிலையில், நேற்றுக் காலை அவர் யாபஹுவவிலுள்ள விகாரையொன்றுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அவரது வருகை குறித்து அறிந்தவுடன் சுதந்திரக் கட்சியின் அரசியல்வாதியான சாலிந்த திசாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் உடனடியாக அவருக்கான வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.



மேலும், மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த விகாரைக்கு மகிந்த விஜயம் செய்திருப்பதை அறிந்தவுடன் பொது மக்களும் பெருமளவில் திரண்டு வந்து அவருக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து விகாரையில் இடம்பெற்ற வழிபாடுகளின் பின்னர் பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மகிந்த சிறிய உரையொன்றையும் நிகழ்த்தியுள்ளார். (செ-12)




# யாழில் ஐ.நா.ஆணையாளர் ஹுசைன்










முதலமைச்சரின் அலுவலகத்தில்....










காணாமற்போனோரின் உறவினர்களுடன்...





ஆளுநரின் அலுவலகத்தில்....





சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாமில்...

யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்களை முதலமைச்சர் அலுவலகத்தில் காலை 9.30 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதேவேளை காணாமற் போனோரின் உறவினர்கள் ஆணையாளரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டதோடு ஆணையாளரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதனையடுத்து வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.பளிகக்காரவை முற்பகல் 10.30 மணியளவில் சந்தித்த ஆணையாளர், பின்னர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமிற்கு சென்று அங்குள்ள மக்களையும் பார்வையிட்டார். (படங்கள் -உ.சாளின்,பொ.சோபிகா)

# 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட்
# இங்கிலாந்தை வீழ்த்தி இலங்கை அரையிறுதியில்





துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என சகலதுறைகளிலும் இலங்கை வீரர்கள் பிரகாசிக்க, இங்கிலாந்து அணிக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் 86 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட இலங்கை அணி அரையிறுதிச் சுற்றுக்கு ஜோராக முன்னேறியது.

19 வயதுக்குட்பட்டோருக்கான ஜூனியர் உலகக் கிண்ண போட்டிகள் பங்களாதேஷில நடைபெற்று வருகிறது.

தற்போது இத்தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், நேற்று 3ஆவது காலிறுதிப் போட்டி மிர்பூரில் நடைபெற்றது.

இப்போட்டியில் இங்கிலாந்து - இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பலம்வாய்ந்த இரண்டு அணிகள் மோதும் போட்டி என்பதால் போட்டி குறித்து பெரும் எதிர்பார்ப்பு காணப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, இலங்கை அணியின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணி சார்பில் வனிது ஹசரங்க டி சில்வா 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் அஷித பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் 185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் துடுப்பாட்டத்தை தொடங்கிய இலங்கை அணிக்கு,

ஆரம்ப வீரர் அவிஷ்க பெர்னாண்டோவின 95 ஓட்டங்கள் கைகொடுக்க, இலங்கை அணி 35.4 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (186) 6 விக்கெட்டுக்களால் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பெர்னாண்டோ 96 பந்துகளில் 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 95, அஸலங்க 34 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் மஹமுத், கிரைன், லோரன்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவிஷ்க பெர்னாண்டோ தெரிவானார்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congrats!





யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 31-வது பட்டமளிப்பு விழாவில் எமது கல்லூரியின் ஆசிரிய நண்பர்களாகிய

திருமதி சுதா றமேஸ் (M.ED) பட்டத்தையும்,

திரு. தங்கவேலாயுதம் சரத்பாபு (PGDE) பட்டத்தினையும் பெற்றுக் கொண்டமைக்காக அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி சுதா றமேஷ்
(BSc, PGDE, M.E.D )

திரு. தங்கவேலாயுதம் சரத்பாபு
(B.A, PGDE in Specialneeds, PGDE

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, கல்லூரிச் சமூகம்

(3533)



வடமராட்சியின் ...

சாதனையாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்....

எமது கல்வி நிலையத்தின் கணக்கீட்டு ஆசிரியர் திரு.பா.கிருஷ்ணஜோதி (B.Com(Hons), Dip.inEdu., M.Ed, MA.in.Pub.Adm.(merit)) அவர்களின் விசேட கணக்கீட்டு பயிற்சி வகுப்பில் கல்வி கற்று கணக்கீட்டுப் பாடத்தில் (A/L-2015) சாதனை படைத்தவர்களான

1. T. பிரணவன் - A
2. S. அனுசன் - A
3. P. நிருசன் - A
4. B. ஜெயந்தன் - A
5. K. நிரோசனா - A
6. S. பாரதி - A
7. R. நியந்தி - A
8. S. மாயக்கிருஷ்ணா - B
9. P. சதீஸ்வரன் - B
10. T. நிசாருஜா - B
11. V. சோபனா - B
12. P. சுவர்ணா - B
13. S. சிவதர்சினி - B
14. T. கஸ்தூரி - B
15. S. சரணியா - B


| விபரம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| "A" சித்தி பெற்றவர்கள் | 07 |
| "B" சித்தி பெற்றவர்கள் | 08 |
| "C" சித்தி பெற்றவர்கள் | 03 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 18 |

ஆகியோர் தன்னம்பிக்கை, துணிச்சல், விடாமுயற்சியுடன் கூடிய தொடர் பயிற்சியால் இவ் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இவ் மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மேன்மேலும் சாதனைகள் பல புரிந்து இத் தரணியில் என்றும் புகழுடன் வாழ்ந்திட உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி
பசுபதி பாலகிருஷ்ணன்
OXFORD ENGLISH ACADEMY
P.K.Lane, Point Pedro

(C-3717)


# முதல் 20 ஓவர் போட்டியில்
# டில்ஷான் விளையாடமாட்டார்



இலங்கை அணி இந்தியா சென்று மூன்று 20 ஓவர் போட்டியில் விளையாடுகிறது. முதல் போட்டி நாளை 9 ஆம் திகதி புனேயில் நடக்கிறது.

இந்த போட்டியில் இலங்கை அணியின் அதிரடி தொடக்க வீரர் டில்ஷான் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. கையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் பங்கேற்கவில்லை. இதனால் அணிக்கு விக்கெட் கீப்பர் டிக்வால அழைக்கப்பட்டுள்ளார்.

எனினும் எதிர்வரும் 12 ஆம் திகதி ராஞ்சியில் நடக்கும் 2-வது போட்டியில் டில்ஷான் விளையாடுவார் என்று தெரிகிறது.





காரைநகர், வாரிவளவு, ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியாரம்பம்
தை 22 ம் நாள்
06.02.2016
சனிக்கிழமை

கும்பாபிஷேகம்:12.02.2016 வெள்ளிக்கிழமை
இராஜகோபுரம்: காலை 6.01-7.29 மணி
மூலஸ்தானம்: காலை 8.49-10.29 மணி

யாகாரம்பம்
தை 27 ஆம் நாள்
10.02.2016
புதன்கிழமை

தை 28 ஆம் நாள் (11.02.2016)
வியாழக்கிழமை காலை 7.00 மணிமுதல் மாலை 2.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்

அன்றைய தினம் பஸ்தரிப்பிடத்தில் இருந்து காலை 5.00 மணிக்கு இ.போ.ச.பேருந்தும் 5.30 மணிக்கு தனியார் பேருந்தும் கோவிலுக்குச் செல்ல விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

-நிர்வாகஸ்தர்-

(சி-3705)



ஓம் சக்தி

இரணைமடு திருவருள்மிகு

## கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்

அறங்காவலர் சபை

Iranaimadu Thiruvarulmiku

KANAKAMBIKAI AMBAL TEMPLE TRUST BOARD

Website:-www.srikanakampikai.com T.P. 0215200561 பதிவு இல Regd No. HA/5/KL/81

### இரணைமடு திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் இராசகோபுர திருப்பணி மதிப்பீடு கோரல்

இவ் ஆலயத்தில் இராச கோபுரம் நவ தளத்தில் அமைய அம்பிகை திருவுளம் கொண்டுள்ளார். அம்பிகை மீது அளவு கடந்த அன்பு கொண்ட புலம் பெயர்ந்து வாழும் அம்மன் அடியார்கள் உள்ளத்தில் இராசகோபுரம் அமைய அடித்தளம் இட்டுள்ளார். அவர்கள் எண்ணக்கருவை பூர்த்தியாக்க அறங்காவலர் சபை வினைத்திறன் மிக்க ஸ்தபதிகள் (சிற்ப கலை வல்லுநர்களிடமிருந்து) வரைபடத்தையும் மதிப்பீட்டையும் மிக விரைவில் கையளிக்க கோருவதோடு- வியாழவரிவரை கருங்கல்லால் ஆன கட்டட அமைப்பு மதிப்பீடு உள்ளடக்கப்பட வேண்டும் என அறங்காவல சபை விரும்புகின்றது.

தொடர்புகளுக்கு:
அறங்காவலர் சபை,
இரணைமடு கனகாம்பிகை
அம்பாள் பெருங்கோவில்,
கிளிநொச்சி.

தொலைபேசி இல
தலைவர்: 077 806 5315
உப.தலைவர்: 077 869 1045
செயலாளர்: 077 496 9053
பொருளாளர்: 077 966 0031

(3532)


## மணிவிழா

(கொழும்பு)

முன்னாள் உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபரும் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான அ.ஈஸ்வர நாதனின் மணி விழா எதிர்வரும் 17ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வு நிலை அதிபர். அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஈஸ்வரம் என்ற மலரும் வெளியிடப்படவுள்ளது. (இ-5)


எமது நிறுவனமாகிய வீனஸ் என்ரப்பிறைசஸ் (தண்ணீர் பில்ரர் கொம்பனி) இற்கு 24 வயதிற்கு உட்பட்ட ஆண் வேலையாள் தேவை.

(மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உள்ளவர் மட்டும்)

தொடர்பு: 021 221 7744
077 248 7172
வீனஸ் என்ரர் பிறைசஸ்
இல. 110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3718)



## வேலை வாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு

AIA

ஆசியாவில் மிகப்பெரிய காப்புறுதி நிறுவனமான AIA குழுமத்தின் இலங்கை நிறுவனமான AIA Insurance Lanka PLC நிறுவனம் உங்களின் எதிர்கால வெற்றிக்கு வழிகாட்டும் வகையில் வேலை வாய்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

### வயது எல்லை: 25-60 வயது

(NGO இல் பணிபுரிந்த அனுபவம் உடையவர்களுக்கும் ஓய்வூதியர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் 10 ஆம் திகதிக்கு முன்னராக எமது யாழ்ப்பாண காரியாலயத்திற்கு வந்து பதிவினை மேற்கொண்டு வரவினை உறுதிப்படுத்துங்கள்.

### *அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

இப்பெறுமதியான வாய்ப்பினை பயன்படுத்தி உங்களின் எதிர்கால வெற்றிக்குத் தேவையான தைரியத்தையும் தன்னம்பிக்கையும் பெற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: AIA Insurance Lanka PLC
62/6, Stanley Road, Jaffna
021 222 1216, 076 528 9947

(3530)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா:20செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/3819 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 14<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BBA, MA/ஆசிரியர்<br>சிங்கப்பூர்<br>தொ.இ: G/4350 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 61செவ் 1 இல்<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்:BSC, MSC/விரிவுரையாளர்<br>தொ.இ: B/3822 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 45செவ் 12 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:CBF, DBF/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4356 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 40செவ் 1 இல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/3828 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 69சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/4368 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/அரசதொழில்<br>தொ.இ: B/3830 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 15செவ் இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc, MSc<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4369 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

08.02.2016
(தை 25, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
அமாவாசை முன்னிரவு 9.26 மணிவரை
திருவோணம் மாலை 6.10 மணிவரை
சுபநேரம் 12.35-2.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம், பூசம்<br>இரவு 5.05 இற்கு<br>கும்-சந் | | |
| சூரி<br>புத<br>சந் | | | குரு<br>ராகு |
| சுக் | சனி | செவ் | |

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், யோகமான நாள்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு.

**கும்பம்:** தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், திடீர் செலவுகள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**கடகம்:** தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம் பெறலாம்.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றிபெற குலதெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ்கூடும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரும் நாள்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.

**கன்னி:** உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், மன நிறைவு கூடும் நாள்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ். வலய ஆரம்பப் பிரிவு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி, பழைய மாணவர்சங்க சுவிஸ் கிளையின் தலைவர் க.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ். நாவாந்துறை ஆர்.சீ. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக இளவாலை சென்.ஹென்ரி கல்லூரி றெக்டர் அருட்தந்தை ஜேசுதாஸன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ்.காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சு.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் கணேசன் புடைவையகம் க.சிவநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.குமரேசமூர்த்தி, காரைநகர் தென்மேற்கு கிராம சேவை அலுவலகர் செல்வி சிதம்பரப்பிள்ளை திருமகள், காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் பீ.செல்லகுமார், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் குணம் தேவதாஸ் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக வியாவில் ஐயனார் தேவஸ்தான சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள் சுஜீவசர்மா கலந்து கொள்ளவுள்ளார். (இ

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ்.தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கு.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்வி அதிகாரி அ.ஈஸ்வரநாதன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் பழைய மாணவரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான பிரம்மஸ்ரீ வரதராஜ சர்மா, துர்க்காபுரம் கிராம சேவையாளர் செல்வி.மு.விஜிதா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ்.சென்.சாள்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி ஜே.கிறிஸ்ரபல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் எஸ்.ஞானசேகரம், பாடசாலையின் பழைய மாணவர் வி.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் சென்.மேரிஸ் தேவாலய பங்குத் தந்தை ஆர்.சி.எச்.நேசராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

யாழ்.சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் மேரி றோஸ்காந்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக கணக்காளர் கே.பார்த்தீபன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக சுண்டுக்குழி சென்.ஜோன்ஸ் தேவாலய பங்குத்தந்தை றெஜி ராஜேஸ்வரன் மற்றும் அருட்சகோதரி ஜோசி மேரி (யாழ்ப்பாணம் காமல் கொன்வேன்ற்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## சுகாதாரத்தொண்டர் நியமனங்களை உடனடியாக வழங்க ஆவன செய்க!

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் கடமையாற்றும் 34 சுகாதாரத் தொண்டர்களுக்குமான நியமனங்களை உடனடியாகவழங்கவேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரேரனை ஒன்றை முன்வைத்தார் வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளருமான சி.ஹரிகரன்.

தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஆகியோர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில்கடமையாற்றும் சுகாதாரத் தொண்டர்களின் நியமனம் வழங்கல் இழுபறி நிலையில் உள்ளது. தற்போது அவர்களின் அமைய அடிப்படையிலான காலநீடிப்பு முடிவுறுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினர் அவர்களை நியமித்தது கூட்டுறவே என்கின்றார்கள். கூட்டுறவு யார் அவர்களை நியமிக்க?

தெல்லிப்பழை வைத்தியசாலையில் உள்ள சிற்றூழியர்களில் 90 வீதமானவர்கள் பெண்கள். வைத்தியசாலையின் கடினமான பணிகளை அவர்களே ஆற்றுகின்றனர். ஆனால், இந்த 34 சிற்றூழியர்களில் 20 பேர் ஆண்கள். இவர்கள் பலவருடங்களாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் கடமையாற்றி, பின்னர் 4 வருடங்களுக்கும் மேலாக எமது வைத்தியசாலையில் கடமையாற்றி நிறைந்த அனுபவமுடையவர்கள் தற்போது அவர்களின் அமைய அடிப்படையிலான கால நீடிப்பு வழங்காமையால், அவர்களில் பலர் கடமைக்கு வருவதை நிறுத்திவிட்டனர். இதனால் விடுதிச் செயற்பாடுகளில் பெரும் அசௌகரியத்தை வைத்தியசாலை எதிர் கொணடுள்ளது. இவர்களின் நிரந்த ர நியமனம் உடன் வழங்கப்படுவதுடன், அதற்கு முன்னர் அவர்களின் அமைய அடிப்படையிலான காலநீடிப்பையும் உடன் செயற்படுத்தப்பட வேண்டும்.

இதற்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான மாவை. சேனாதிராசா, நியமனம் தொடர் பில் வடக்கு மாகாண சுகாதார அமைசசர் தன்னிடம் 700 சுகாதாரத் தொண்டர்களின் பெயர்ப்பட்டியல் உள்ளது. அந்தப் பட்டியலில் இவர்களின் பெயர்களும் உள்ளன. அனைத்தையும் சேர்தது நிரந்தர நியமனம் வழங்குவோம் என்று தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் குறுக்கிட்டு, பின்னர் மிகுதி ஆட்களுக்கான நியமனத்தை வழங்கட்டும். உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலுள்ள இந்த 34 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறை வேற்றுங்கள் என்றார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களுள் ஒருவரான இ.அங்கஜனும், தன்னிடமும் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்கள். உடனடியாக நியமனம் வழங்கப்படவேண்டும் என்றார். தீர்மானம் அவையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (இ)

## சின்ன வெங்காயச் செய்கையில் றைக்கோ டெமா பாவனை



இம்முறை பெரும் போகத்தில் புங்குடுதீவு விவசாய போதனாசிரியர் பிரிவில் றைக்கோ டெமா பங்கசினை பாவிப்பதன் ஊடாக வெங்காயச் செய்கைகளின் போது ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தி தரமான விளைச்சலினை பெற்று கொள்வதற்கான முன் மாதிரி துண்டம் அமைக்கப்பட்டதன் பிரதிபலிப்பினை வெளிக்காட்டும் முக மாக அறுவடை விழா கடந்த 2 ஆம் திகதி புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது கருத்து தெரிவித்த அப்பகுதி விவசாய போதனாசிரியர் ஆ.சுதர்சனன் மேற்படி பங்கசினை வெங்காய தோட்டங்களுக்கு மாட்டெரு அல்லது கோழி எரு அல்லது கூட்டெரு என்பவற்றுடன் கலந்து பாவிப்பதன் மூலம் வெங்காய செய்கையின்போது உண்டாகும் பங்கசு நோய்களை செலவு குறைந்த முறையில் கட்டுப்படுத்த முடியும் எனவும் இதனால் பங்கசு நாசினிகளுக் கான செலவினையும் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (இ)

## மாணவர்களை இணைக்க விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக் கல்லூரிக்கு இவ்வாண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கல்லூரியில் 8 பாடப்பரப்புகளுக்கான தேசிய தொழிற்றகைமை மட்டம் (NVQ) 5 இற்குரிய டிப்ளோமா மற்றும் மட்டம் 6 இற்குரிய உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுவதுடன் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற இணைபாட விதானங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

இதற்கமைய குடிசார் பொறியியல் கட்டுமானத் தொழில் நுட்பவியல் குடிசார் கட்டுமானத் தொழில்நுட்பவியல் அழுகுக்கலை, விவசாய இயந்திரவியற் தொழில் நுட்பவியல், உணவுத் தொழில் நுட்பம், விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை முகாமைத் துவம், இயந்திர மின்னணுவியல், உற்பத்தித் தொழில் நுட்பவியல் போன்ற 8 கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

எனவே மேற்படி கற்கை நெறிகளுக்கு க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்ற அல்லது தேசிய தொழில தகைமை மட்டத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் இல. 29, பிறவுண் வீதி, கொக்குவில் என்ற முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இணையத்தள முகவரி www. ucj.lk, மின்னஞ்சல் intousjaffna@ sltnet.lk .021 221 7792, 021 2217794 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




## இடமாற்றம்

வடக்குமாகாணகல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எஸ். புஸ்பலிங்கம் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். வடமராட்சி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய எஸ்.ஏ. ஸ்ரீதரன் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 39ஆவது சிரார்த்த தினம்



(யாழ்ப்பாணம்)

சட்ட மேதை ஜீ.ஜீ. பொன்னம் பலத்தின் 39 ஆவது சிராத்த தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குருநகரில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணி வித்து அனுஷ்டிக்கப்படும்.

இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## நிர்வாகத் தெரிவு

வடமராட்சி புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சன சமூக நிலையத்தின் வரு டாந்த பொதுக்கூட்டம் அண் மையில் நடைபெற்ற பொது புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தலைவராக பா.இரகுநாதனும் உப தலைவராக திருமதி தி.சரஸ்வதியும் செயலாளராக மு.ஜெகதேவனும் உப செயலாளராக ந.வேலானந்தனும் பொருளாளராக திருமதி ரே.நாகேஸ்வரியும் தெரிவு செய்யப் பட்டதுடன் ஆ.செல்வராசா, ச.இராசேந்திரம், பா.அரிய தாஸ், பா.மயூரன், திருமதி ஸ்ரீ.ரேணுகா, கா.பவானி ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

## பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று

பூந்தளிர் மாவட்ட பெண்கள் அமைப்பின் பொதுச்சபைக் கூட்ட மும் நிர்வாகத் தெரிவும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி க்கு மருதனார்மடம் விவசாயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யூலியஸ் செல்வமலர் தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க பெண்கள் செயற்றிட்ட இணைப்பா ளர் திருமதி பி.லவீனா லசந்தி, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க வடக்கு, கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், மகாசபை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க தலைவர் சூ.சிந்தாத்துரை , தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க மாவ ட்ட இணைப்பாளர் என்.இன்பம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)


## சிற்றூழியர் தேவை

சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு மற்றும் இதர பணிகளுக்காக சிற்றூழியர்கள் (ஆண்கள்) தேவை.

- யாழ்ப்பாண நகர மையத்தை அண்மித்து வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- உணவு வசதிகளுடன் தங்கியிருந்தும் வேலை செய்ய முடியும்.

பொருத்தமானவர்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



## யாழ்.பல்கலைக்கழகத்தில் 31 ஆவது பட்டமளிபபு விழாவில் பட்டம் பெற்ற எமது உறவுகளை இதய பூர்வமாக வாழ்த்துகிறோம்



திரு.தவராஜா வசந்தன்
ஆசிரியர், யா/ மத்திய கல்லூரி
BA(Hons ), MA (Merit)



திரு.தேவராஜா சதீஸன்
B.Sc (Hons) in Agriculture



K.மதுஷன்
B.Sc (Hons) in Agriculture



திரு.அழகேசன் அமிர்தசிந்துஜன்
B.F.A.(honours)
நுண்கலைமாணி



செல்வி.சுவர்ணா கமலநாதன்
B.F.A.(honours)
நுண்கலைமாணி



செல்வி.ராஜினி இராசேந்திரம்
B.F.A.(honours)
நுண்கலைமாணி



செல்வி.சர்மினி பரமலிங்கம்
B.F.A.(honours)
நுண்கலைமாணி

க.பொ.த. உயர்தரத்தில் சாதனை நிகழ்த்திய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.



செல்வன். விக்னேஸ்வரன் கஜகரன்
கணிதப்பிரிவு-3 A
யா/ யாழ்.இந்துக் கல்லூரி.



செல்வன் சிவகுமாரன் சர்வக்ஞன்
கணிதப்பிரிவு-3 A
யா/ யாழ்.இந்துக் கல்லூரி.



உதயகுமார் ரசிந்தா
வர்த்தகப் பிரிவு- 2A,C
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

(சி-3716)

வாழததுவோ: இணுவல இநதுக கலலூரி பழைய மாணவா சஙகம, இணுவல இநதுக கலலூரி நமபககை நலையம , தேவா மணவிழா சபை, தரு.ஞானதருகேத்ஸவரன குடுமபததினர் K.T.C. கல்வி நிலையம், இரா.அருட்செல்வம் குடும்பத்தினர் A.T.C.கல்விநிலையம், மக்கள் நலன் பேணும் அமைப்பு (கோண்டாவில்), சக்திவேல் ஹாட்வெயார் (கோண்டாவில்), இணுவில் பொது அமைப்புக்கள்.


## யாழ். கலாலயா பயிற்சியகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு...







கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதி, யாழ்.கலாலயா பயிற்சியகத்தில் கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம். Facial பயிற்சிகளை நிறைவு செய்த 2015 c பிரிவு மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், அனைத்துப் பயிற்சிகளிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற இரு மாணவிகள் பயிற்சியக இயக்குநர் மா.சுதர்சன் அவர்களிடம் இருந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்கின்றனர். அருகில் பயிற்றுவிப்பாளர்களும் பரீட்சை மேற்பார்வையாளர்களும் காணப்படுகின்றனர். அத்துடன் பயிற்சிகளில் சித்தியடைந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட ஏனைய மாணவிகளையும் படத்தில் காணலாம்.

# அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்துவதில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் திண்டாட்டம்

## தாம் நஷ்டமடைவதை தடுக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை

(முள்ளியவளை)

**முல்லைத்தீவில் அரசாங்கமோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ அறுவடை செய்யப்பட்டுவரும் நெல்லை கொள்வனவு செய்ய முன்வராமையினால் நெல்லைச் சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பெரும் திண்டாட்டத்திலுள்ளனர். இதனால் மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் தனியாருக்கே அவற்றை விற்பனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் விவசாயிகள் உள்ளனர்.**

அரசாங்கத்தினால் ஒரு கிலோ நெல்லிற்கு 35 ரூபா என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளபோதும், தனியார் ஒரு கிலோ நெல்லினை 18 ரூபாவிற்கே கொள்வனவு செய்து வருகின்றனர் இதன்படி நெல் சந்தைப்படுத்தும்சபையினர் நெல்லை கொள்வனவு செய்யும்போது ஒரு கிலோ நெல்லினை 35 ரூபாய்படி 70 கிலோ கொண்டதாக ஒரு மூடை நெல்லினை 2450 ரூபாவற்கு கொள்வனவு செய்வர். ஆனால் தனியாரோ ஒருகிலோ நெல்லினை 18 ரூபாய்படி ஒரு மூடைக்கு 70 கிலோ கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் 5 கிலோ நெல்லினை கழிவாக கணித்து 75 கிலோ நெல்லினை கொள்வனவு செய்கின்றனர். இதனால் விவசாயிகள் 75 கிலோ நெல்லினை ஆயிரத்து 260 ரூபாவிற்கு கொடுக்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

தாம் நெல்லை விதைக்கும் போது உழவு இயந்திரக் கூலியில் அரைவாசிப்பணத்தினையே விதைக்கும்போது வழங்குகிறோம். மிகுதிப் பணத்தினை நெல் அறுவடை செய்தவுடன் நெல்லை விற்று வழங்குகிறோம் ஆனால்நெல் அறுவடை இயந்திரத்தின் கூலியை உடனே வழங்க வேண்டிய நிலை உள்ளது. இதனைவிட நெல்லை பராமரிப்பதற்கான கூலிகளும் ஏனைய பராமரிப்புச் செலவுகளும் வட்டிக்கு கடன்பட்ட பணத்திலிருந்தே அதனை ஈடு செய்கிறோம். தற்போது அவற்றை மீள வழங்கவேண்டிய நிலையில் நாம் உள்ளோம். வேறு வழியின்றி தனியார் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்கின்றபோதும் அவர்களுக்கே வழங்குவதைவிட வேறு வழி எமக்கில்லை என அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

எனவே விவசாயிகள் நட்டமடையாது நெல்லை சந்தைப் படுத்துவதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையினரும் பிரதேச கூட்டுறவுச் சங்கங்களும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு மாவட்ட அரசாங்க அதிபரும் மாகாண மத்திய அரசியல் வாதிகளும் உரிய நடவடிக்கைகளை எடுத்து உதவ வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (3-302)




## 200 பைக்கற் சீமெந்து



(பனிக்கன்குளம்)

வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டட கட்டுமானத்திற்கு பங்களிக்கும் வகையில் இவ்வாண்டுக்கான ஒதுக்கீட்டிலிருந்து 200 பைக்கற் சீமெந்து வழங்குவதாக வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் வள்ளுவர்புரம் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது மக்களின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் குறையாகவுள்ள பாடசாலை கட்டடமும் கட்டி முடிக்கப்படும் எனவும் அச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னமும் விடுவிக்கப்படாத நஞ்சுண்டான் குளம் மற்றும் அபகரிக்கப்பட்ட பொதுக்காணிகள் மீட்பது தொடர்பில் பல்வேறு முறைபாடுகளை மக்கள் முன் வைத்தனர்.

பொதுக்காணி மீட்பு மற்றும் நஞ்சுண்டான் குளம் விடுவிக்கப்படாமை தொடர்பான மக்களின் கேள்விக்கு ரவிகரன் பதிலளிக்கையில்,

அவை தொடர்பான தனது நடவடிக்கைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன என்று தெரிவித்தார். (3-281)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு 6 துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இந்த துவிச்சக்கர வண்டிகள் கிளி/உருத்திரபுர மகா வித்தியாலயம், கிளி/குரவில் தமிழ் வித்தியாலயம், மு/உடையார்கட்டு GTM பாடசாலை, மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாசாலை, கிளி/கோணாவில் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே மேற்படி துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (படம்:- மல்லாவி செய்தியாளர்)

## மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரிப்பு பொலிஸ் நிலையம் அமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடிச் சந்தியில் மாலை நேரங்களில் பல இளைஞர்கள் மது அருந்தி விட்டு மாணவர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோரோடு தினமும் சண்டையிடுவதும் தகராறு பண்ணுவதும் அதிகரித்த வண்ணம் உள்ளது. உருத்திரபுரம் கூழாவடிச் சந்தியில் அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையம் தற்போது இயங்காதபடியினால் மீண்டும் மதுப்பிரியர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

மாலை நேரங்களில் வகுப்புக்கள் முடிந்து வரும் மாணவ, மாணவிகள் பலரும் இம் மதுப்பிரியர்களால் இடர்படுகின்றனர்.

கூழாவடிச் சந்திக்கு முன்பாகவுள்ள இராணுவ காவலரணுக்கு அருகிலேயே இவ்வாறான அவல நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பல மாதங்களாக பொலிஸ் நிலையம் கூழாவடியில் இயங்கி வந்த போது இந்த நிலைமை இருக்கவில்லை.

எனவே மிக விரைவாக பொலிஸ் நிலையம் ஒன்று முன்பு இருந்தது போன்று அமைக்கப்படவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-309)

## அடிக்கல் நாட்டல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் கல்யாண மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை மறுதினம் முற்பகல் 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை இடம்பெறவுள்ளது.

முருகப் பெருமான் அடியார்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (3-254)

## இடைக்கால தடை அறிவிப்பையும் மீறி முல்லையில் தொடரும் மதுபான விற்பனை

### வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் இடைக்காலத் தடையையும் மீறி முல்லைத்தீவு மணற்குடியிருப்பு பகுதியில் உள்ள மதுபான சாலை இயங்கி வருவதாக வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதியிலிருந்து பூட்டப்பட்டிருந்த குறித்த மதுபான சாலை கடந்த 5 ஆம் திகதி இரவு திறக்கப்பட்டிருந்ததாக அக் கிராமத்து இளைஞர்கள் கூறியதையடுத்து தாம் நேரில் சென்று பார்வையிட்டு அதனை உறுதிப்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

தடையையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கும் குறித்த மதுபான சாலை தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு தொலைபேசி ஊடாக கொண்டு சென்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்களின் ஒருமித்த எதிர்ப்பின் பலனாக மாவட்டச்செயலகத்தால் குறித்த மதுபானசாலைக்கான மதுபான விற்பனை அனுமதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அதனை மீறும் வகையில் மதுபான விற்பனை தொடருமாக இருந்தால் அம் மதுபானசாலை அப்பகுதியில் இருந்து அகற்றப்படும் வரை மக்களோடு இணைந்து எதிர்ப்பு நடவடிக்கை அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 3.02.2016 முதல மதுபான விற்பனையை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் மேற்படி மதுபானசாலையின் விற்பனை நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துமாறு மதுபான சாலை உரிமையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் அதன் பிரதிகள் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள், சமூக பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-281)

## வவு.பூவரசு ஆரம்ப பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டடம் திறப்பு

(குருமன்காடு)

விசேட அதிரடிப்படையினரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள பூவரசு ஆரம்ப பாடசாலையின் இரண்டு மாடி கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை யுத்த காலப்பகுதியில் 1991 ஆம் ஆண்டு தாக்குதலுக்குள்ளாகி தற்காலிக கொட்டிலில் இயங்கி வந்தது, பின்னர் 1997 ஆம் ஆண்டு இப்பாடசாலை மாணவர்கள் வவுனியா பூவரசங்குளம் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டிருந்தனர்.

கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து விசேட அதிரடிப்படையினரால் சுமார் 05 வருட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த இப் பாடசாலைக் காணி கடந்த வருடம் பல்வேறு தரப்பினரின் அழுத்தங்களுக்கு மத்தியில் விடுவிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு விசேட அதிரடிப் படையினர் இப்பாடசாலையை விட்டு விலகிய பின்னர் மீண்டும் வழமைபோல் தமது கல்வி செயற்பாட்டை ஆரம்பித்து தற்போது இரண்டு மாடிக் கட்டட தொகுதி ஒன்றினை இப்பாடசாலை பெற்றுள்ளது.



புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத் தொகுதியை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே. மஸ்தான் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். அதனை தொடர்ந்து பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளும் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, இ.இந்திரராசா, எம்.பி.நடராஜா, வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் அன்ரன் சோமராஜா, வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜகுரு, விசேட அதிரடிப்படை அதிகாரி குமாரசிங்க, பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி இ.புனிதவதி, தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (3-250)

# விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் திட்டத்தில் வடக்கு, கிழக்கில் 'விளையாட்டு அக்கடமி' நிறுவப்படும்

## விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் வவுனியாவில் தெரிவிப்பு

(குருமன்காடு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களின் விளையாட்டுத் துறையை மேம்படுத்த விளையாட்டு அக்கடமி நிறுவப்படும் என விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஹாதீப் முகமட் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.**



கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விளையாட்டுக்கழங்கள், விளையாட்டு வீரர்களுடனான சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கமும் விளையாட்டுத்துறை அமைச்சும் விளையாட்டுத்துறையை மேம்படுத்த பல திட்டங்களை வகுத்துள்ளது. இதற்காக எமது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதியை ஒதுக்கியுள்ளனர். கிராமபுறங்களில் உள்ள விளையாட்டுமைதானங்கள், விளையாட்டுக் கழகங்களை விருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நான் வடகிழக்கைச் சேர்ந்தவன் என்ற வகையில், வடகிழக்கு கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல சீரழிவுகளை சந்தித்துள்ளது.

யுத்தத்திற்கு முன்பு எமது பகுதி வீரர்கள் பலர் தேசிய அணியில் இணைந்து சர்வதேச ரீதியில் பெருமை தேடித்தந்தமையை மறந்து விட முடியாது. அந்த அடிப்படையில் வடகிழக்கு பிராந்தியத்தில் மீண்டும் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டும்.

வடபகுதியில் உள்ள மைதானங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்காக முதல் கட்டமாக வரவு செலவுத் திட்ட நிதியை மைதானங்களுக்கு பயன்படுத்துவது தொடர்பில் ஆராயவேண்டியுள்ளது. கடந்த காலங்களில் விளையாட்டுக் கழகங்களுக்கு சில உதவிகள் கிடைத்திருந்தாலும், இந்த வருடம் விளையாட்டுக் கழகங்களை பலப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

வவுனியா மாவட்டத்திற்கான விளையாட்டுக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் இன்னும் ஓரிரு வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது. தொற்றா நோய் இன்று அதிகரித்து வருகிறது. அதனை கட்டுப்படுத்துவதற்காக ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்யும் வகையில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் நடைப்பயிற்சி செய்யக் கூடிய இடங்களை அமைப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, மாணவர்களை பரிசோதனை செய்து ஐரோப்பிய, மேலைத்தேய நாடுகள் போன்று அவர்களுக்கு விருப்பமான விளையாட்டுக்களை தெரிவு செய்து பயிற்சி வழங்கப்படவுள்ளது. எமது அமைச்சின் இலக்காக 2024, 2028 ஆம் ஆண்டுகளில் அதிகளாவிலானோர் சர்வதேச ஒலிம்பிக் போட்டியில்எமது நாட்டில்இருந்து பங்குபற்றி கூடுதலான தங்கப் பதக்கங்களை சுவீகரித்து தர வேண்டும். அத்துடன், வெளிநாடுகளில் இடம்பெறும் சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றும் வீரர்கள் தொடர்பாக பரிசீலித்து அவர்களுக்கான விமான பற்றிச் சீட்டு உள்ளிட்ட சில உதவிகளையும் எமது அமைச்சால் வழங்க முடியும். வடக்கு, கிழக்கு பகுதியின் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விளையாட்டு அக்கடமி ஒவ்வொன்று நிறுவப்படவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண பொதுவான அபிவிருத்தி தொடர்பில் எதிர்வரும் மே, ஜூன் மாதங்களில் பாரியளவிலான கலந்துரையாடல் ஒன்றை நடத்த பிரதமர் தீர்மானித்துள்ளார். அதன்மூலம்வருகின்ற வெளிநாட்டு நிதிகளில் விளையாட்டுத்துறைக்கும் வழங்குமாறு கோரியுள்ளோம். அதன் மூலம் வடகிழக்கு விளையாட்டுத் துறையை மேலும் விருத்தி செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (3-250)

# சுமுகமான கல்வி நடவடிக்கைக்கு இடையூறாக பலதரப்பட்ட தடைகள்

## வவு.விக்கினேஸ்வரா அதிபர் சுட்டிக்காட்டு





வ/ விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி வித்தியாலயத்தின் அதிபர் செல்வ தேவன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் தியாகராசா, வவுனியா வடக்கு வலய கல்வி பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராசா, நெடுங்கேணி கோட்ட கல்வி பணிப்பாளர் கிருபானந்தன், வவுனியா வடக்கு முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் இராஜேஸ்வரன், அருட்பணி அன்புராசா அடிகளார், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், கிராம பொது அமைப்பு களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த பாடசாலையில் வகுப்பறை கட்டட வசதிகள், ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகள் உட்பட கல்விக்கு பெரும் தடையாக போக்குவரத்து வசதி இன்மை, பாதைகள் புனரமைப்பு இன்றி காணப்படுகின்றமை, மின்சாரம் வழங்கப்படாமை, காட்டு யானைகளின் அத்துமீறல் போன்ற பிரச்சினைகள் காணப்படுவதாகவும், இவற்றை நிவர்த்திசெய்து மாணவர்களின் சுமுகமான கல்வி நடவடிக்கைகளுக்கு வழியேற்படுத்தி தருமாறும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகளிடம் பாடசாலை சமூகத்தினரும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப்பாடசாலையில் கல்விகற்றுவரும் போரினால் தாய் அல்லது தந்தையை இழந்த 15 மாணவர்களுக்குரிய பாதணிகளை அருட்பணி அன்புராசா அடிகளார் அதிபர் செல்வதேவனிடம் கையளித்தார். (3)

# வித்தியானந்தா கல்லூரியின் எதிர்காலம் குறித்து முல்லை.சமூக மட்ட அமைப்புக்கள் பெரும் கவலை

## வடக்கு மாகாண கல்வியமைச்சருக்கு கடிதம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் எதிர்கால நிலைமை எனும் தலைப்பில் 39 சமூக மட்ட அமைப்புக்களால்வடமாகாண கல்வி அமைச்சருக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வித்தியானந்தா கல்லூரிக்கு மாணவர்களை வழங்கும் பிரதான பாடாசாலையாக தண்ணீருற்று இந்து தமிழ் கலவன் பாடசாலை அமைந்துள்ளது இவ் வருடம் திடீரென அதன் வகுப்புக்கள் உயர்த்தப்பட்டதன் விளைவாக வித்தியானந்தா கல்லூரியின் மாணவ தொகை வீழ்ச்சியடைந்துள்ளமை வித்தி யானந்தா கல்லூரியின் சமூக மட்டத்தில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளதோடு இந்ததேசிய பாட சாலையின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்ற ஐய உணர்வினையும் ஏற்படுத்தியுள்ளது

இந்த பாடசாலையானது முல்லை கல்வி வலயத்தின் ஒரேயொரு தேசியப் பாடசாலையாகவும் கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் பல வெற்றிச் சாதனைகளை படைத்த ஒரு கல்விக்கூடமாகவும் விளங்கி வருகின்றது.

அயற் பாடசாலைகளை சிறந்த பாடசாலைகளாக ஆக்குதல் என்ற அபிவிருத்தித் திட்டத்தில் வித்தியானந்தா கல்லூரியும் உள்வாங்கப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டு 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்டிருத்தல் வேண்டும். இந்த நிலையில் தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வகுப்பு தரமுயத்தப்பட்டதால் பெரும்பங்கு கொண்டு இடம்பெற வேண்டிய இவ் அபிவிருத்தியா னது எமது கல்லூரிக்கு கிடைக்காமல் போகக்கூடிய வாய்ப்புள்ளமை மிகவும் மனவருத்தத்துக்குரியதும் வரலாற்று தவறுமாகும்

தண்ணீருற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை கோட்டம், வலயக் கல்வித் திணைக்களம் , மாகாணக் கல்வித்திணைக்களம் என்பவற்றின் சிபார்சு இல்லாது நேரடியாகவே கல்வி அமைச்சின் பணிப்பின் பேரில் தரம் உயர்த்தியது எங்கள் மத்தியில் கேள்வியை எழுப்பியுள்ளது. தனிப்பட்ட விருப்புக்களுக்காக இம்முடிவை எடுத் துள்ளமை எமதுபிரதேசஒட்டுமொத்த கல்வியினை குழி தோண்டிப் புதைப்பதற்கு ஒப்பானது.

இத்தகைய முடிவுகள் எடுக்கும்போது பிரதேச கல்விமான்கள், சமூக மட்ட அமைப்புக்களை உள் வாங்கி அவர்களது கருத்துக்களிற்கு இடமளித்து முடிவெடுப்பதே சிறந்ததாக அமையும் என நாம் கருதுகிறோம். எமது பாடசாலைக்கு ஒருகிலோ மீற்றர் தூரத்திற்குள் இரண்டு வகுப்பு தரம் கூடிய பாடசாலைகள் உள்ளமை பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அது மட்டுமல்லாது எமது பிரதேசமக்கள் தொகையினையும் கருத்திற்கொண்டு முடிவெடுப்பதே சாலச் சிறந்ததாகும் என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(3-281)




# இரவு வேளையில் முளைத்த கடைகள் காணி உரிமம் தொடர்பில் முரண்பாடு

## கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் சம்பவம்

கிளிநொச்சி ஊற்றுப்புலம் சந்தியில் கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான நிலத்தில் மூன்று கடைகள் நள்ளிரவு வேளையில் நிறுவப்பட்டுள்ளன.


இக் கடைகள் கட்டுவதற்கான நிலப்பகுதி சோலைநகர் கிராம மக்களுக்கு கடை கட்டுவதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஊற்றுப்புலம் சந்தியில் ஸ்கந்தபுரம் கோணாவில் பிரதான வீதிக்கு எதிர்ப்புறமாக ஊற்றுப்புலம் கிராம மக்களுக்கும் மறுபுறத்தில் சோலைநகர் கிராம மக்களின் பயன்பாட்டிற்கும் உரித்தானதோடு கிராம சேவையாளர் பிரிவுகளும் வெவ்வேறானவையாகும். இந் நிலையில் ஊற்றுப்புலம்கிராம சேவையாளர் பிரிவுக்குள் அடங்காத இந்நிலம்சோலைநகர்கே.என். 37 புதுமுறிப்புகிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு உரித்தானதாகும்.

இந் நிலத்தில் ஒரு கிழமைக்கு மேலாக நள்ளிரவு வேளையில் மூன்று கடைகள் நிறுவப்பட்டு செயற்படுத்தப்படுவதை முற்றாக எதிர்த்த சோலைநகர் கிராம அபிவிருத்திச் சங்கமும் மக்களும் இந்நிலம் ஏற்கனவே தமக்கு வழங்கப்பட்ட நிலம் என கூறுகின்றனர்.

இவ்விடத்துக்கு வருகை தந்த புதுமுறிப்பு கிராம சேவை உத்தியோகத்தர் மஞ்சுளா பாலகுமார் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த நிலையில் கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் மற்றும் கரைச்சி பிரதேச செயலர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட கடிதங்களுக்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் ஆதங்கப்படுகின்றார்கள்(2-309)

# வலி.வடக்கு மக்களை மீள்குடியேற்ற அரசை வலியுறுத்தக்கோரி மகஜர்



## ஐ.நா.ஆணையாளரிடம் யாழில் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

**வலி.வடக்கு மக்களை வெகு விரைவில் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு அரசை வலியுறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனிடம் வலி. வடக்கு மக்கள் மகஜர் ஒன்றினை நேற்றைய தினம் கையளித்துள்ளனர்.**

யாழ்ப்பாணத்துக்கு நேற்றையதினம் வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் சயிட் அல்ஹுசைன்வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அப்போது வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சார்பாக வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர் வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபால சிங்கத்தால் மகஜர் கையளிக்கப்பட்டது.

மேலும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலி. வடக்கில் கடந்த 1983 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் இனப் பிரச்சினை காரணமாக மக்கள் தமது தொழிலை இழந்து பாதிக்கப்பட்டு இருந்தனர். பின்னர் 1990ஆம் ஆண்டுஜுன்மாதம் 15 ஆம் திகதி நாட்டில் ஆரம்பித்த யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அன்றைய சூழ்நிலையில் வலி.வடக்கில் இருந்து 10 ஆயிரம் குடும்பங்கள் கல்வி, வீடு, உணவு, வேலை என்பவற்றை இழந்து விட்டார்கள்.

தற்போது நாட்டில் போர் முடிந்து 6 வருடங்கள் கழிந்த நிலையிலும் அதே நிலை தான்தொடர்ந்து கொண்டுள்ளது. 25 வருடங்களுக்கு மேல் இடம்பெயர்ந்து தற்போது 8 ஆயிரத்து 500 குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் வெளிநாடுகளிலும் வசித்து வருகின்றனர்.

ஆயிரத்து 500 குடும்பங்கள் 36 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வலி.வடக்கு சில காணிகள் விடுவிக்கப்பட்டிருந்தும் கீரிமலையில் இருந்து வளலாய் வரையான பகுதியில் 24 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பும் 12 கிலோ மீற்றர் கடற்கரையோரமும் இன்னமும் படையினர் வசமே இருக்கின்றது. அதற்குள் 20 கிராம சேவகர் பிரிவுகளில் வைத்தியசாலைகள், வழிபாட்டுத்தலங்கள் பாடசாலைகள் என்பன அழிவடைந்த நிலையிலுள்ளன.

மேலும் மயிலிட்டி துறைமுகம் ஒரு காலப்பகுதியில் நாட்டில் மூன்றில் ஒரு பங்கு அபிவிருத்திக்கு உதவியாக இருந்து வந்த துறைமுகம் ஆகும். தற்போது பாதுகாப்பு படையினர் வர்த்தக நோக்கத்துடன் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். அவர்களின் தேவைக்காக பயன்படுத்துகின்றனர்.

எமது பகுதியை விடுவித்தால் 36 நலன்புரி நிலையங்களையும் மூடமுடியும். நீண்ட நாட்களாக எமது அரசை வலியுறுத்தி வருகின்றோம். எனவே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள எமது நிலத்தை வெகு விரைவில் விடுவித்து எம்மை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என அரசை வலியுறுத்த வேண்டும் என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## ஐ.நா.ஆணையாளரிடம் முஸ்லிம்களும் மகஜர் கையளிப்பு

வடக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திலும் அவர்களின் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்துமாறு கோரி ஆணையாளர் சயிட் அல் ஹுசைனிடம் யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தினர் மகஜர் ஒன்றினை கையளித்தனர். யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அதன்போதே யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளன தலைவர் எ.எச்.ஜமால் மொகிடீனால் மகஜர் கையளிக்கப்பட்டது. (இ-9)




கோண்டாவில் குமரகோட்டம் இளைஞர் கழகத்துக்கு தனது 2016 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டிலிருந்து ரூ.40 ஆயிரம் பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் அண்மையில் வழங்கி வைத்தார். நல்லூர் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் குமரகோட்டம் இளைஞர் கழகத்தலைவருமான கி.நிஷாந்தன் தலைமையில் கோண்டாவிலில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாகாண சபை உறுப்பினருடன் நல்லூர் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் யுகராஜ், நல்லூர் பிரதேச இளைஞர்கழக சம்மேளனங்களின் உபதலைவரும் கிராம அலுவலருமான ப.தர்சானந் இளைஞர் கழக உறுப்பினர்கள், ஊரவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



யாழ். உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட தரம் 1 மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கால்கோள் விழா அண்மையில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற போது...



சுவாமி தயானந்த சரஸ்வதியின் ஆன்மாவிற்கு அருள் வேண்டிய பிரார்த்தனை நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை மண்டபத்தில் நடைபெற்ற போது...



யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி சி.பத்மராஜா கலந்து கொண்டு மாணவர்களுக்குரிய சின்னங்களை அணிவித்தார்.

# சர்வதேசத்தின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா ரொக்கெட் ஏவியது

(சியோல்)

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி நேற்றுக் காலை வடகொரியா ரொக்கெட் ஏவியுள்ளது. இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள ஐ.நா. அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

வடகொரியா 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினைக் கண்டு கொள்ளாமல், சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்து, ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தையும் மீறி, அணு ஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

அவ்வாறு இதுவரை 3 முறை அந்த நாடு அணு குண்டு சோதனைகளையும், பலமுறை அணு ஏவுகணை சோதனைகளையும் நடத்தி, பொருளாதார தடைகளை சந்தித்து வருகிறது. ஆனாலும், அதிக சக்தி வாய்ந்த புதிய ஐதரசன் குண்டு ஒன்றை உருவாக்கி உள்ளதாக அந்த நாட்டின் ஆட்சியாளரான கிம் ஜாங் உன் அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார். கடந்த மாதம் 6ஆம் திகதி புங்க்யே ரி நகரில் உள்ள அணு ஆயுத சோதனைத்தளத்தில் ஐதரசன் குண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதாக வடகொரியா அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இதனையடுத்து உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. ஐ.நா. சபையும் வடகொரியா மீது மேலும் பொருளாதார தடைகளை கொண்டுவர முன்வந்தது.

இந்நிலையில் ஐ.நா.வின் தீர்மானத்தையும் மீறி வடகொரியா ரொக்கெட் ஏவியுள்ளது.

ஐதரசன் குண்டு சோதனை நடத்தியதற்கு வடகொரியாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வந்தநிலையில் வடகொரியாவின் தற்போதைய நடவடிக்கையானது கோபத்தை இரட்டிப்பு ஆக்கியுள்ளது.

வடகொரியா இது, அறிவியல் சார்ந்த செயற்கைக் கோள் திட்டம் என்று கூறியுள்ளது.

எனினும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை என்று சர்வதேச நாடுகள் கருதுகின்றன. அமெரிக்காவின் நிலப்பகுதியை தாக்கும் திறன்கொண்ட ஆயுதங்கள் தயாரிப்பதே வடகொரியாவின் நோக்கம் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வட கொரியா ரொக்கெட் ஏவியதற்கு ஜப்பான், அமெரிக்கா மற்றும் தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளன. கடும் விளைவுகளை வடகொரியா சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்து உள்ளன. (இ)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு
பொருத்தமானவர்களிடம் இருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம் - பெண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (வெளியகம் - ஆண்கள்)

தகைமையும் ஆர்வமும் உடையவர்கள் எதிர்வரும் 09.02.2016 அன்று பிற்பகல் 3.30மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

(இ)

இல.03, 02 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

மனிதவள முகாமையாளர்
வலம்புரி


## பிரகீத் எக்னெலிகொட கடத்தல் தொடர்பில் நான்கு புலனாய்வாளர்கள் விரைவில் கைது

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச்செய்யப்பட்டமை தொடரபில் மேலும் நான்கு இராணுவப் புலனாய்வாளர்கள் கைதுசெய்யப்படவுள்ளனர்.

இவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று அரசாங்க செய்தித்தாள் புலனாய்வாளர்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. ஏற்கனவே இந்த சம்பவம் தொடர்பில் 6 புலனாய்வாளர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் கையடக்க தொலைபேசி தரவுகளின் அடிப்படையிலேயே மேலும் 4 புலனாய்வாளர்கள் கைது செய்யப்படவுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதியன்று பிரகீத், பெலவத்த என்ற இடத்தில் வைத்து கடத்திச்செல்லப்பட்டார்.

இதுவரை மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின் படி கடத்தப்பட்ட பிரகீத், ஜனவரி 25 ஆம் திகதியன்று அக்கரைப்பற்றுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கிரித்தலேக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இந்த நிலையில் கிரித்தலேயில் இருந்து பின்னர் பிரகீத் அழைத்துச் செல்லப்பட்ட இடத்தை கண்டறிய அக்கரைப்பற்றில் அமைந்துள்ள தனியார் கையடக்க தொலைபேசி நிறுவனத்தின் தொடர்புக் கோபுர தரவுகளை ஆராய்வதாக புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



### பெண்களுக்கான பலன்கள்

#### பீடத்தில்

பெண்களுக்கு இடது பீடத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் வாழ்க்கைக்கு தேவையான சகல வசதிகளையும் பெற்றிருப்பார்கள். கணவனுக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்து, சிறந்த குணவதியாக வாழ்ந்து பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பார்கள்.

வலது பீடத்தில் மச்சம் இருந்தால் அவர்கட்கு மேற்கூறிய பலன்களுக்கு மாறான பலன்கள் பொருந்தும். அவர்கள் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்களாக உடல் உழைப்பால் உண்டு வாழ்பவர்களாக இருப்பார்கள். கணவனுக்கு இஷ்டமானவளாகவும் இருப்பாள்.

வலது பீடத்துக்கும் இடது பீடத்துக்கும் இடையே மச்சம் இருந்தால் அவர்கள் ஏழ்மையில் பிறந்து காலமெல்லாம் கஷ்டங்களை அனுபவித்து வாழ்பவர்களாக இருப்பார்கள்.

#### வயிற்றில்

பெண்களின் வயிற்றின் மேற்பகுதியில் மச்சம் இருந்தால் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதிகளையும் பெற்றிருப்பார்கள். கணவர் மனம் கோணாது நடக்கும் பதிவிரதையாய் ஆவார்கள். வாழ்க்கையில் மகிழ்வும் அமைதியும் உண்டாவதற்கு காரணமான வசதிகளை குறைவறப் பெற்றிருப்பார்கள். கணவருக்கு எந்த வகையிலும் துரோகம் செய்யாத பண்பு நலமுடையவர்களாக இருப்பார்கள். நன் மக்கட்பேற்றையும் பெற்று மகிழ்வார்கள்.

ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண் குழந்தைகள் அதிகமாக இருக்கும்.

வயிற்றின் கீழ்ப்பகுதியில் மச்சம் இருந்தால் அவர்கள் குழந்தைச் செல்வங்களை குறைவறப் பெறுவார்கள். வயிறு நிரம்ப உண்ணுகின்ற பழக்கமுடையவர்கள் சுவையான பலகாரங்களில் விருப்பம் அதிகமாக உடையவர்களாவார்கள்.

வயிற்றுக்கும் ஸ்தனங்களுக்கும் இடையே மச்சம் இருந்தால் அவர்களது வாழ்க்கை நிம்மதி அற்றதாகும். அவர்களுக்குத் திருமணம் நடைபெறாது. அப்படியே திருமணம் நடைபெற்றாலும் சிறு வயதிலேயே கணவரை இழந்து துன்பமடைவார்கள்.

#### தொப்புளில்

பெண்களின் தொப்புளில் மச்சம் இருந்தால் அவ்வாறு இருக்கும் பெண்கள் நல்ல பலன்களை அடைவார்கள். வாழ்க்கைக்குரிய சகல சுகங்களையும் வசதிகளையும் அனுபவிப்பார்கள் என்று மச்ச சாஸ்திரம் கூறுகிறது.

தொப்புளில் உள்ள மச்சம் கருமையாகவும் பெரிதாகவும் இருந்தால் அப் பெண்களின் வாழ்க்கை ஒரே இன்பமயமானதாக இருக்கும். அவர்கள் எல்லா வசதிகளையும் பெற்று எல்லா வகையான சுகங்களையும் அனுபவிப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் எவ்வித கஷ்டத்தையும் அனுபவிக்க மாட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் நிம்மதியும் இன்பமும் மிகுந்து காணப்படும். அவர்களுக்கு நற்குணங்களும் நல்ல உடற்கட்டும் உடைய ஆண்களே கணவனாக அமைவார்கள். மொத்தத்தில் இந்த மச்சம் உடைய பெண்கள் பெரும் பாக்கியசாலிகளாவார்கள் எனலாம்.

தொப்புளின் அடியில் மச்சம் இருந்தால் அவர்கள் மேற்கூறிய பலன்களுக்கு மாறான பலன்களை அடைவார்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் பல விதமான துன்பங்கள் உண்டு. இந்த மச்சம் உடையவர்களில் சிலருக்கு எவ்வித வசதியும் இருக்காது. அவ்வாறு இருந்தும் அவர்கள் வீண் கர்வம் கொண்டலைவார்கள். மற்றவர்களிடம் அன்பாக பழக தெரியாமல் கடுகடுப்பாகவே பழகும் இயல்புடையவர்களாக இருப்பார்கள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## புகையிரதம் மோதி ஒருவர் பலி

கலாவெவ புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்றுக் காலை புகையிரதம் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற கடுகதி புகையிரதம் மோதியே 45 வயதுடைய சியம்பலாங்கமுவ, பொதானேகம பிரதேசத்தை சேர்ந்த நபர் உயிரிழந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கலாவெவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

## போதைப்பொருளுடன் கைதான 6இளைஞர்கள் விளக்கமறியலில்

சிவனொளிபாத மலை யாத்திரைக்கு சென்ற ஆறு இளைஞர்கள் போதைப்பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கினிகத்ஹேன பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இளைஞர்களிடம் கஞ்சா காணப்பட்டதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹற்றன் கடமை நேர நீதிபதியின் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் அவர்களை இன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தர விட்டுள்ளார்.

குறித்த இளைஞர்கள் 18 - 21 வயதுக் கிடைப்பட்ட, நுகேகொடை, தெமிமுல்லை, திவுலப் பிட்டிய போன்ற பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பாண் தொண்டையில் சிக்கியதில் பெண்ணொருவர் பரிதாப மரணம்

பாண் மற்றும் சம்பல் தொண்டையில் சிக்கியதில் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று புத்தளம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம், இசுருபாய எனும் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதையுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் அநுராதபுரம் பிரதேசத்திற்கு சுற்றுலா மேற்கொண்டு அங்கு உணவு உட்கொண்ட நிலையிலேயே குறித்த பரிதாப சம்பவம நேற்றுக் காலை நேர்ந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் மிகிந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கேகாலை மாவட்டத்திற்கு 3 பொலிஸ் நிலையங்கள்

சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக மக்களின் நலன் கருதி கேகாலை மாவட்டத்திற்கு புதிய பொலிஸ் நிலையங்கள் மூன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சரும் கேகாலை மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான ரஞ்சித் சியமபலாபிட்டிய இதனை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கேகாலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த புதிய பொலிஸ் நிலையங்களை இம்புல்கஸ்தெனிய, கலிகமுவ, மொரன்தொட்டை ஆகிய பிரதேசங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஆற்றில் குளித்த மாணவர் பலி

நாவெல பாலத்தின் அருகில் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மாணவர் ஹங்வெல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் சடலம் கடற்படையால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. (இ)

## கார் விபத்தில் இருவர் பலி

கண்டி, பண்டாரநாயக்க மாவத்தையில் காரொன்று, முன்னால் பயணித்துக்கொண்டிருந்த உழவுஇயந்திரம், பவுசருடன் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்தவர்களில் இருவர் பலியாகியுள்ளனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.10இற்கு இடம்பெற்ற இந்த விபத்தில் கண்டியைச்சேர்ந்த பிரேமகுமார ஜயசுந்தர (வயது 42), கடுகஸ்தோட்டையை சேர்ந்த திலான்குணசேகர ஆகிய இருவருமே பலியாகியுள்ளனர். சம்பவத்தில் படுகாயமடைந்த உழவு இயந்திரம், பவுசர் வாகனத்தின் சாரதி கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் காரின் சாரதியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## நைஜீரியாவை அச்சுறுத்தும் லாசா காய்ச்சலுக்கு 101 பேர் உயிரிழப்பு

நைஜீரியா நாட்டை அச்சுறுத்தி வரும் லாசா காய்ச்சலுக்கு 101 பேர் பலியாகி இருப்பதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 2015 ஒகஸ்ட் மாதம் முதல ஜனவரி மாதம் வரையில் இந்நோயால் 175 பேர் பாதிக்கப்பட்டதாகவும் 101 பேர் பலியானதாகவும் தேசிய நோய்த்தடுப்பு மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அபுஜா உள்ளிட்ட 19 மாநிலங்களில் இந்நோய் பாதிப்பு என சந்தேகப்படும்படியான நோயாளிகள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் உறுதி அளித்த போதிலும், தற்போது வெளியான தகவல் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு 12 பேரும் 2012ல் 112 பேரும் இறந்துள்ளனர். அருகில் உள்ள பெனின் நாட்டில் லாசா காய்ச்சலுக்கு 9 பேர் பலியாகியிருப்பதாகவும் 20 பேருக்கு இந்த நோய்த்தாக்கம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மரணம் விளைவிக்கும் கொடிய வைரஸ்களான மார்பார்க், எபோலா போன்று லாசா காய்ச்சலும் மிக மோசமான நோயாகும். 1969 ஆம் ஆண்டு நைஜீரியாவின் லாசா நகரில் இந்த வைரஸ் காய்ச்சல் அடையாளம் காணப்பட்டதால் அதற்கு லாசா காய்ச்சல் என்று பெயரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## அகதிகளாக நுழையும் ஐ.எஸ்.தீவிரவாதிகள்

### ஜேர்மனி உளவுத்துறை எச்சரிக்கை

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளுடன் சேர்ந்து ஐ. எஸ். தீவிரவாதிகள் நுழைவதாக ஜேர்மனி உளவுத்துறை எச்சரித்துள்ளது.

சிரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

எனவே, அங்கு வாழ வழியற்ற மக்கள் வெளியேறி ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

அவர்களுடன் ஐ.எஸ். தீவிரவாதிகளும் ஊடுருவி ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தற்போது இதை ஜேர்மனியின் உள்நாட்டு உளவுத்துறை (பி.எப்.வி.) உறுதி செய்துள்ளது.

இது குறித்து அந்த உளவுத் துறையின் தலைவர் ஹன்ஸ் மாசென் கூறும்போது, "கடந்த நவம்பர் மாதம பாரீஸில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். அப்போதே இவர்கள் ஐரோப்பிய நாடுகளில் புகுந்து தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பது தெரிய வந்தது. அவர்கள் அகதிகளுடன் சேர்ந்து மாறு வேடத்தில் புகுந்துள்ளனர்.

ஜேர்மனி தலைநகர் பெர்லினில் நடத்த திட்டமிட்ட தாக்குதலை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள் ளனர். ஜேர்மனியில் ஊடுருவியிருக்கும் அவர்களை கண்டுபிடிப்பதில் தீவிரமாக இருக்கிறோம். ஐ.எஸ். தீவிரவாதிகள் குறித்து 100இற்கும் மேற்பட்ட தகவல்கள் கிடைத்துள்ளன.

அதன் அடிப்படையில் தலைநகர் பெர்லினில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பலரை பிடிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்றார். (இ)

## தாய்வானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 18 பேர் உயிரிழப்பு

### 132 பேரைக் காணவில்லை


தாய்வானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 132 பேரை காணவில்லை. தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தாய்வானின், தாய்வான் நகரில் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை 3.57 மணிக்கு (இந்திய நேரப்படி அதிகாலை 1.30 மணி) பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 புள்ளிகளாக பதிவானது. நிலநடுக்கம் தாக்கியபோது மக்கள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். கட்டடங்கள் குலுங்கியதால் அவர்கள் பதறியடித்துக் கொண்டு எழுந்து, வடுகளை விட்டு வெளியேறி வதிகளுக்கு ஓட்டம் பிடித்தனர்.

17 மாடி கட்டடம் ஒன்று உடபட பல கட்டடங்கள் தரை மட்டமாகின. எங்கு பார்த்தாலும் மக்களிடையே ஒரு பதற்றமும், உயிர் பிழைத்து விட வேண்டும் என்ற பரிதவிப்பும் காணப்பட்டது. இருப்பினும் கட்டடங்கள் தரை மட்டமானதில் இடிபாடுகளில் சிக்கி 8 பேர் பலியாகி விட்டதாக முதல் கட்ட தகவல்கள் வெளியாகியன. தகவல் அறிந்ததும் மீடபு படையினரும், பொலிஸ படையினரும் விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். முப்படையும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளது. மீட்பு பணியின் போது மேலும் சிலர் சடலமாக மீட்கப்பட்டனர்.

நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்து உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில் இன்னும் 132 பேரை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. நில நடுக்கத்தில் மொத்தம் 484 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் முதற்கட்ட சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். நிலநடுக்கத்தினால் மன்சார சேவையானது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கம் பற்றி மத்திய தாய்வான், தென் தாய்வான் பகுதி மக்கள் கூறும்போது, இது 1999 ஆம் ஆண்டு, 2 ஆயிரத்து 400 பேரை பலி கொண்ட நில நடுக்கத்தை போன்று இருந்ததாக தெரிவித்தனர். தாய்வான் புவித்தட்டுகள் நகர்கின்ற பகுதியில் இருப்பதால், அங்கு அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுவது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



### புளூட்டோவில் மிதக்கும் பனி மலைகள்

## புதிய தகவல்களை வெளியிட்ட நாசா



புளூட்டோ கிரகத்தில் மிதக்கும் பனி மலைகள் இருப்பதை, நாசாவின் நியூ ஹாரிசான் விண்கலம் படம் பிடித்து அனுப்பியுள்ளது.

புளூட்டோ கிரகத்தை ஆராய நியூ ஹாரிசான் விண்கலத்தில், அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனம் நாசா அனுப்பி உள்ளது. இந்த விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன கமராக்கள், புளூட்டோவின் மேற்பரப்பை பல கோணங்களில் படம் எடுத்து அனுப்பி உள்ளன. அவற்றை ஆய்வு செய்த நாசா, புளூட்டோவில் உறை நிலையில் நைட்ரஜன் பனிமலைகள் இருப்பதாக தெரிவித்துள்ளது.

நைட்ரஜன் பனிக் கட்டியை விட தண்ணீர் பனிக் கட்டியின் அடர்த்தி குறைவு என்பதால் உறை நிலையில் உள்ள நைட்ரஜனால் உருவான கடலில் இந்த பனி மலைகள் மிதக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மேலும், பூமியில் ஆர்க்டிக் கடலில் பெரும் பனிக்கட்டிகள் மிதப்பது போல் புளூட்டோவில் பனிமலைகள் மிதப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்த மலைகள் ஒரு கிலோ மற்றர் முதல் பல கி.மீ. வரை உள்ளதாக தெரிய வந்துள்ளது. கடந்த ஆண்டு ஜூலை 14 ஆம் திகதி நியூ ஹாரிசான் விண்கலம் நெருங்கிச் சென்று படம் பிடித்தது குறிப்பிடத்தக்கது. (இ)

## பாகிஸ்தானின் தற்கொலைப்படை தாக்குதலில் 8 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் எல்லைப்புற பாதுகாப்பு படையினர் தங்களுடைய ரோந்து பணியை முடித்துவிட்டு சில வாகனங்களில் மாகாண தலைநகர் குவெட்டாவுக்கு திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது நகரின் மாவட்ட நீதிமன்றங்கள் உள்ள பகுதியில் தற்கொலை படை தீவிரவாதி ஒருவன் பாதுகாப்பு படை வாகன அணிவகுப்பை குறி வைத்து தாக்குதல் நடத்தினான்.

இதில் அந்த வழியாக வந்த வாகனங்கள் தூக்கி வீசப்பட்டு பலத்த சேதம் அடைந்தன. அந்த பகுதியில் நடமாடிக் கொண்டிருந்த பொது மக்களில் ஏராளமானோரும் தாக்குதலில் சிக்கிக் கொண்டனர்.

இதில் பாதுகாப்பு படையினர் 2 பேரும் பொதுமக்களில் 6 பேரும் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 25 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப் பேற்றுக் கொண்டு இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன. (இ)

## பேருந்து - லொறி நேருக்கு நேர் மோதியது

# விபத்தில் சிக்கிய 14பேர் உயிரிழப்பு



மதுரை அருகே அரசு பேருந்தும், லொறியும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட கோர விபத்தில் 4 பெண்கள் உட்பட 14 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழுந்தனர்.

மேலும் படுகாயமடைந்த 40 பேர் மதுரை அரசு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் பலர் ஆபத்தான நிலையில் உள்ளதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை தேனி மாவட்டம், குமுளிக்கு அரசு பேருந்து புறப்பட்டது.

மாலை 3.25 மணியளவில் மதுரை மாவட்டம், பாறைப்பட்டி கோபால்சாமி மலை விலக்கு அருகே, மதுரை-கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் பேருந்து வந்து கொண்டிருந்தது.


அப்போது எதிரே கரூரில் இருந்து செங்கோட்டை ஆரியங்காவு நோக்கி சீமெந்து மூட்டைகள் ஏற்றிச் சென்ற லொறி, பேருந்து மீது நேருக்கு நேர் பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் பேருந்தின் முன்பகுதி முழுவதும் உருக்குலைந்தது. இதில் லொறி தலைகீழாக பேருந்து மீது கவிழ்ந்தது.

பேருந்தில் இடிபாடுகளில் சிக்கிய பயணிகள் அவல குரல் எழுப்பினர். அந்த வழியாக வாகனங்களில் சென்றவர்கள், இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். தகவலறிந்து வந்த பேரையூர் பொலிஸார் மற்றும் திருமங்கலம், டி.கல்லுப்பட்டி தீயணைப்பு படையினர் மீட்புப் பணிகளில் தீவிரமாக இறங்கினர்.

இந்த விபத்தில் லொறி சாரதி நெல்லை கடையநல்லூர் சுந்தரேசபுரத்தைச் சேர்ந்த முத்துக்குமார் (வயது-35), பேருந்து சாரதி தேனி வீரபாண்டியைச் சேர்ந்த முருகேசன் (வயது-49), பயணிகள் தேனி மாவட்டம் பெரியகுளத்தைச் சேர்ந்த சுருளி ராஜன், நெல்லை மாவட்டம் வள்ளியூரைச் சேர்ந்த செல்வராஜ், விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன், கோவில் வலையபட்டியைச் சேர்ந்த கூடலிங்கம் (வயது-40) மற்றும் 4 பெண்கள் உட்பட 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.40 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இவர்களுக்கு மதுரை, திருமங்கலம் உள்ளிட்ட வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. (இ)

## நிலவில் கால் பதித்து நடந்த விண்வெளி வீரர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

நிலாவில் கால் பதித்து நடந்த 6 ஆவது விண்வெளி வீரர் என்ற சிறப்பை பெற்றவர், எட்கர் மிட்செல் (வயது-86). அமெரிக்கரான இவர், 1971ஆம் ஆண்டு, இதே பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி அப்பல்லோ 14 விண்கலம் மூலம் ஆலன் ஷெபேர்டு என்ற விண்வெளி வீரருடன் சென்று நிலாவில் கால் பதித்தார். அத்துடன் நிலாவில் மிக நீண்ட தூரம் நடந்து சாதனை படைத்தவர்கள் என்ற பெயரும் இவர்களுக்கு உண்டு.

94 பவுண்ட் எடைகொண்ட சந்திர மண்டல பாறைகள், மண் மாதிரிகளை சேகரித்து பூமிக்கு கொண்டு வந்து, அவற்றை ஆராய்ச்சிக்காக அமெரிக்காவில் 184 விஞ்ஞானிகள் குழுக்களுக்கும், 14 பிற நாடுகளுக்கும் வழங்கியதில் எட்கர் மிட்செல்லுக்கு முக்கிய பங்கு உண்டு. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு நாசாவிலும், அமெரிக்க கடற்படையிலும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் இவர.

நிலாவில்கால்பதித்து நடந்ததன்45 ஆவது ஆண்டுவிழாவை கடந்த 5 ஆம் திகதி கொண்டாடவிருந்த நிலையில், 4 ஆம் திகதி மாலை புளோரிடாவில் உயிரிழந்தார். (இ)

## பனிச்சரிவில் சிக்கி 5 வீரர்கள் மரணம்

ஐரோப்பியாவில் உள்ள அல்ப்ஸ் மலையில் தற்போது கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. எனவே, இங்கு கொட்டிக் கிடக்கும் பனியில் வீரர்கள் பனிச்சறுக்கில் ஈடுபட்டுள்ளனர்.

அதற்காக வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வந்து குவிகின்றனர். இந்த நிலையில் ஆஸ்திரியாவில் உள்ள அல்ப்ஸ் மலையில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட 'செக்' நாட்டை சேர்ந்த 17 பேர் இரு குழுக்களாக வந்தனர்.

அவர்கள் இஸ்ஸ்புருக்கில் உள்ள ஜன்ஸ்ஜோக் மலை அருகே வாட்டென்டல்பள்ளத்தாக்கில் முகாமிட்டிருந்தனர். இந்த நிலையில் அங்கு திடீரென கடும் பனிச்சரிவு ஏற்பட்டது.

தகவல் அறிந்ததும் மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இருந்தும் 5 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் பலரை தேடும் பணியும் நடக்கிறது. (இ)

## பீஜிங்கில் பாரிய நிலநடுக்கம்; இருவர் பலி, 34பேர் படுகாயம்!

பீஜிங்கில் நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் 6.7 ரிக்டர் அளவிலான பாரிய நிலநடுக்கம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி நிலநடுக்கமானது, பீஜிங் கௌசிங் என்ற இடத்திலேயே இடம்பெற்றுள்ளது.

இதனால் பாரிய சேதங்கள் இடம்பெற்றுள்ளன.

இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 34 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்மாடி குடியிருப்பு கட்டடம் இடிந்து முற்றாக விழுந்துள்ளமையால் அதில் வசிக்கும் சுமார் 123 பேரின் நிலை இன்னும் வெளியாகவில்லை.

இதனடிப்படையில் மீட்பு பணிகள் தீவிரமாக இடம்பெற்றுவரும் நிலையில், கன ரக இயந்திரங்களின் உதவி கொண்டு மேலும் மீட்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)




## இந்தியக் கடல் பகுதிக்குள் நுழைந்த பாகிஸ்தான் மீனவர்கள் 11 பேர் கைது

குஜராத் மாநில கடல்பகுதியில் பாகிஸ்தான் மீனவர்கள் எல்லை தாண்டி இந்திய கடல்பகுதிக்குள் மீன்பிடிக்க வருவது வாடிக்கையாக உள்ளது.

நேற்று முன்தினம் பாகிஸ்தான் மீனவர்கள் 11 பேர் இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க ஒரு பெரிய படகில் வந்தனர்.

அவர்கள் கட்ச் மாவட்டத்திற்கு உட்பட்ட ஜக்காவ் கடல்பகுதியில் இந்திய கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டனர்.


அவர்களது படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

ஏற்கனவே இந்திய மீனவர்கள் 440 பேர் கைது செய்யப்பட்டு பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் 860 படகுகளும் பாகிஸ்தான் வசம் உள்ளன. இவர்களில் பெரும்பாலானோர் குஜராத் மாநிலத்தை சேர்ந்த மீனவர்கள் ஆவர்.

பாகிஸ்தான் சிறையில் உள்ள மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி தேசிய மீனவ அமைப்புகள் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆற்றில் கவிழ்ந்து பேருந்து விபத்து

## 39 பேர் பலி



(அகமதாபாத்)

குஜராத் மாநிலத்தின் நவ்சாரி மாவட்டத்தில் உள்ள பூர்ணா நதியில் அரசு பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பலி எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது.

குஜராத் மாநிலத்தின் நவ்சாரி மாவட்டத்தின் நவ்சாரி நகரில் இருந்து அரச பேருந்து ஒன்று நேற்று முன்தினம் மாலை உகாய் பகுதிக்கு சென்று கொண்டிருந்தது.

அந்த பேருந்தில் சுமார் 60 பயணிகள் இருந்தனர். சுபா கிராமத்தில் உள்ள பூர்ணா நதிக்கு மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தில் பேருந்து சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிடுவதற்காக பேருந்தைஇடதுபுறமாகசாரதிதிருப்பினார்

அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, தாறுமாறாக ஓடி கண்ணிமைக்கும் நேரத்தில் ஆற்றில் தலைகுப்புற கவிழ்ந்தது. சுமார் 40 அடி உயரத்தில் இருந்து விழுந்ததால் பேருந்து நொறுங்கியதுடன் வேகமாக நீரில் மூழ்கியது.

இந்த கோர விபத்தில் நீரில் மூழ்கியும், இடிபாடுகளுக்குள் சிக்கியும் 20 பயணிகள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்புக்குழுவினரால் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இந்த கோர விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 21 பேர் பெண்கள் என்பது தெரியவந்துள்ளது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு, குஜராத் மாநில அரசு தலா 4 இலட்சம் ரூ. இழப்பீடு அறிவித்துள்ளது.

விபத்தில் படுகாயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சைக்கான செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அம்மாநில அமைச்சர் ஆனந்தி பென் கூறியுள்ளார். (இ)

# அதிகளவில் பொய் பேசிய அரசியல்வாதிக்கான விருது

## பிரான்ஸ் பெண் அரசியல்வாதிக்கு கிடைத்தது

பிரான்ஸ் நாட்டில் உள்ள புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகள் குறித்து அதிகளவில் உண்மைக்கு புறமபாக பேசியதற்கான விருது அந்நாட்டை சேர்ந்த பெண் அரசியல்வாதி ஒருவருக்கு கிடைத்துள்ளது.

உலகிலேயே முதன் முதலாக பிரான்ஸ் நாட்டில் கடந்தாண்டு ஒரு வினோதமான விருது வழங்கும் நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

"Liar of the Year" எனப்படும் அந்த விருது பிரான்ஸ் நாட்டு அரசியல்வாதிகளை குறிவைத்து வழங்கப்பட்டு வருகிறது.

அதாவது, பிரான்ஸ் குடிமக்களுக்கு உண்மைக்கு புறம்பான தகவல்களை தெரிவிக்கும் அரசியல்வாதிகளை பட்டியலிட்டு, அவர்களில் அதிகளவில் பொய்யான தகவல்களை மக்களுக்கு தெரிவித்த அரசியல்வாதிக்கு இந்த விருது அறிவிக்கப்படும்.

இந்த விருதை தெரிவு செய்யும் அமைப்பிற்கு அந்நாட்டைச் சேர்ந்த மிகச்சிறந்த அரசியல் விமர்சகரான Thomas Guenole என்பவர் தலைமை தாங்குகிறார்.

மேலும், இந்த அமைப்பில் உறுபபினர்களாக உள்ள அனுபவம் வாய்ந்த ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகளின் பட்டியலை தயார் செய்வார்கள்.

இந்த விருதின் மூலம் தனது தவறுகளை திருத்திக்கொண்டு மக்களுக்கு சரியான தகவல்களை அரசியல்வாதிகள் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த விருது வழங்கும் நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த 2015 ஆம் ஆண்டில் மக்களுக்கு அதிகளவில் பொய்யான தகவலை அளித்த அரசியல்வாதிகளின் பட்டியலில் பிரான்ஸ் நாட்டு தேசிய முன்னணி கட்சியை சேர்ந்த பெண் அரசியலவாதியான மரீன் லீ பென (Marine Le Pen) என்பவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் மக்களுக்கு அதிகளவில் பொய்யான தகவல்களை, குறிப்பாக பிரான்ஸ் நாட்டில் உள்ள புலம்பெயர்ந்தவர்களை குறித்து அதிகளவில் பொய்யான தகவல்களை தெரிவித்துள்ளார்.

உதாரணத்திற்கு, மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவிற்கு குடியேற வரும் அகதிகளின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் தினந்தோறும் 10 மடங்காக அதிகரித்துள்ளது என ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கூறினார்.

ஆனால், உண்மையில் இது ஒரு பொய்யான தக்வல்கள் ஆகும. ஒவ்வொரு நாளும் புலம்பெயர்ந்தவர்கள் 10 மடங்காக அதிகரிப்பது சாத்தியம் இல்லாத விடயம்.

மற்றொரு சம்பவத்தில், கெலைஸ் பகுதியில் உள்ள அகதிகள் முகாமில் தீவிபத்து ஏற்பட்டபோது அங்கு வந்த தீயணைப்பு வீரர்களை அகதிகள் அடித்து நொறுக்கினார்கள் என பரபரப்பு தகவலை வெளியிட்டார்.

ஆனால், 'மரீன் கூறியுள்ளது முற்றிலும் தவறானது. எங்களை அகதிகள் யாரும் தாக்கவில்லை' என தீயணைப்பு துறையே பின்னர் விளக்கம் அளித்தது.

இதேபோல், பிரான்ஸ் நாட்டில் புகலிடம் கோரி வரும் அகதிகளில் 99 சதவிகிதத்தினர் ஆண்களாகவே உள்ளனர் என கூறினார். பின்னர் இந்த புள்ளிவிபரத்தை அவரே குறைத்து 75 சதவிகிதம் என அறிவித்தார்.

ஆனால், உண்மையில் பிரான்ஸ் நாட்டிற்கு குடியேற வரும் அகதிகளில் 69 சதவிகிதத்தினர் மட்டுமே ஆண்கள் ஆகும்.

இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் குறித்து பொய்யான தகவல்களை அள்ளி வீசிய இந்த அரசியல்வாதிஎய கௌரவிக்கும் விதத்தில் 'Liar of the Year -2015' என்ற விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவரான மரீன் லீ பென, அடிப்படையிலருந்து அகதிகளுக்கு எதிரான கொள்கைகளை கொண்டுள்ளவர் என்பதால், அவர்களை குறித்து பொய்யான தகவல்களை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 300 | 300 | 200 |
| தக்காளி | 50 | 60 | 50 | 60 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 100 | 70 |
| கரட் | 250 | 250 | 180 | 320 | 300 | 250 |
| பூசணி | 100 | 80 | 60 | 100 | 100 | 50 |
| புடோல் | 80 | 40 | 40 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 80 | 45 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 50 | 80 | 70 | 70 |
| பாகற்காய் | 120 | 100 | 90 | 80 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 160 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | — | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 180 | 150 | 150 | 140 | 140 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 120 | 80 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 80 | 120 | 150 |
| கறிமிளகாய் | 300 | 400 | 180 | 240 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | — | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 80 | 100 | 70 | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 70 | — | 70 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 10 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 50 | 80 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 150 | 90 | 180 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 80 | 80 | 120 | 80 |
| முள்ளங்கி | 40 | 40 | 30 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | 120 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## முன்னாள் தமிழ் எம்.பிக்கள் சுட்டுக்கொலை 99

### ....சாகத் தயார்

மிகப்பெரிய நாடான அமெரிக்காவில் நான் இறங்க மறுத்தது, அமெரிக்க அதிகாரிகளுக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. அமெரிக்காவில் 26 மணி நேரம் தங்கி இருந்த நான் மீண்டும் இந்தியாவுக்கு விமானத்தில் திருப்பி அனுப்பப்பட்டேன்.

விமானம் லண்டனில் இறங்கியதும் 2 இந்திய அதிகாரிகள் விமானத்துக்குள் வந்து நீங்கள் இந்தியா திரும்பினால் கண்டிப்பாக இலங்கைக்குத்தான் அனுப்பப்படுவீர்கள் என்று கூறினார்கள். இந்திய மண்ணில் எனக்கு அடைக்கலம் இல்லை என்றால் செத்து மடிந்தாலும் ஈழத்துக்குச் செல்லத் தயார் என்று கூறிவிட்டு வந்தேன்.

### பிரதமருக்கு மனு

மும்பையில் என்னைச் சந்தித்த தமிழக இ.காங்கிரஸ் எம்.பி.ரங்கராஜன் குமாரமங்கலத்திடம் நாடு கடத்தல் உத்தரவை ரத்து செய்யக் கோரி பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு மனு கொடுத்து அனுப்பினேன்.

அந்த மனுவின் அடிப்படையிலோ அல்லது தமிழக மக்களின் போராட்டத்தின் அடிப்படையிலோ இந்திய அரசு என்னை மீண்டும் இந்தியாவில் இருக்க அனுமதித்தது. இதற்காகப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கை பிரச்சினையைத் தீர்க்க ஆர்வத்துடன் இருக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பேன்.

### பாலசிங்கம்

நாடு கடத்தப்பட்டு இருக்கும் விடுதலைப்புலிகள் இயக்க ஆலோசகர் பாலசிங்கம், சத்தியேந்திரன் ஆகிய இருவரையும் இந்தியா திரும்ப, இந்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

சத்தியேந்திரன் தமிழ் ஈழ விடுதலை முன்னணி அமைப்பின் (டெலோ) திம்பு பேச்சு வார்த்தை பிரதிநிதியாகக் கலந்துகொள்ள இங்கிலாந்தில் இருந்து வரவழைக்கப்பட்டவர்.

இவர்கள் 2 பேரும் இல்லாமல், 2 இயக்கங்களும் திம்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள இயலாது. எனவே அவர்களை நாடு கடத்திய உத்தரவை ரத்து செய்யாவிட்டால் திம்பு பேச்சுவார்த்தையில் இடையூறு ஏற்படும்.

இவ்வாறு சந்திரஹாசன் கூறினார்.

சென்னை வந்த சந்திரஹாசன், தி.மு.க.தலைவர் கருணாநிதியைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

### வழக்கு தள்ளுபடி

இதற்கிடையே சந்திரஹாசன் நாடு கடத்தப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று டெல்லி (சுப்பீம்) கோட்டில் ஜனதா தலைவர் இரா.செழியன் தாக்கல் செய்திருந்த மனு, நீதிபதிகள் சின்னப்ப ரெட்டி, வி.காலித் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய அரசு தலைமை வக்கீல் (அட்டர்னி ஜெனரல்) பராசரன் எழுந்து சந்திரஹாசன் நாடு கடத்தப்பட்ட உத்தரவை மத்திய அரசு ரத்து செய்துவிட்டது என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து இரா. செழியனின் வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

இதன் பின்னர் சில மாதங்கள் கழித்து பாலசிங்கமும் சென்னை திரும்பினார்.

இலங்கைத் தமிழ் முன்னாள் எம்.பி.க்கள் ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடத்திச்சென்று அவர்களைக் கொன்றவர்கள் யார் என்று தெரியவில்லை.

1983 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கை அரசாங்கம், ஒரு புதிய சட்ட திருத்தம் கொண்டு வந்தது. அதில் பிரிவினை கேட்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்; தனி நாடு கோரிக்கையை வலியுறுத்தும் கட்சிகள் தடை செய்யப்படும்; தனி நாடு கேட்பவர்கள் பிரஜா உரிமையை இழப்பார்கள். அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது. அவர்களின் சொத்துகளும் பறிமுதல் செய்யப்படும் என்று கூறப்பட்டிருந்தது.


இந்தச் சட்டத்தின்படி எல்லா எம்.பி.க்களும் பிரிவினை கேட்க மாட்டோம் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த 16 எம்.பி.க்களும் ராஜினாமா செய்துவிட்டனர்.

### கடத்தல்

ராஜினாமா செய்த எம்.பிக்களான எம்.ஆலாலசுந்தரம், வி.தர்மலிங்கம், டி.ராசலிங்கம், கே.துரைரத்தினம் ஆகியோர் அவரவர் வீடுகளில் இருந்தபோது சிலரால் கடத்திச்செல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் 2.9.1985 அன்று நடந்தது.

மறுநாள் ஆலாலசுந்தரமும் தர்மலிங்கமும் பிணமாகக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆலாலசுந்தரம் உடல் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நல்லூரில் உள்ள அவரது வீட்டுக்கு 1 கிலோ மீட்டர் தூரத்தில் கிடந்தது. தர்மலிங்கத்தின் உடல் யாழ்ப்பாணத்தில் கிடந்தது. 2 பேருமே துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.




(தொடரும்)

# பௌத்தத்தைப் பாதுகாக்கவே நான் வன்முறையில் ஈடுபட்டேன்

## ஞானசார தேரர் சிறையிலிருந்து கடிதம்

(கொழும்பு)

பொதுபலசேனாவின்பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வெலிக் கடை சிறையிலிருந்து ஊட கங்களுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.



குறித்த கடிதத்தில் தான் பௌத்த மதத்தை பாதுகா க்கவே சற்று வன்முறைத்த னமாக நடந்து கொண்டதா கவும், அரசியல்வாதிகளும், மகாநாயக்க தேரர்களும் மௌனமாக இருக்கும் நிலை யில் அதனைத் தவிர தனக்கு வேறு வழி தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முஸ்லிம், கிறிஸ தவ மதங்கள் இலங்கையில் அடிப்படைவாதத்தை பரப்பி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவற்றுக்கு எதிராக செயற் பட்டதன் காரணமாகவே தான் இப்போது சிறைக்கம்பிகளு க்குள் சிறை வைக்கப்பட்டு ள்ளதாக ஞானசார தேரர் தெரிவித்தார்.

தன்னை சிறையில் அடை ப்பது தொடர்பில் முஸ்லிம், கிறிஸ்தவ இயக்கங்கள் மட்டு மன்றி, தன்னார்வத் தொணடு நிறுவனாங்களும் பின்னணி யில் செயற்பட்டுள்ளதாகவும் ஞானசார தேரர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஞானசார தேரரின் கடி தம் திவயின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எனினும் சிறைச்சாலை விதிகளின் பிரகாரம் தடுப்புக் காவல் அல்லது தண்டனை விதிக்கப்பட்ட எந்தவொரு கைதியும் எதுவிதமான கடித ங்கள், எழுத்து ஆவணங் களை வெளியில் அனுப்ப முடியாது.

சிறைச்சாலை நிர்வா கத் தினால்· வழாங்கப்படும் கடித உறையில் எழுதிக் கொடுக் கப்படும் கடிதங் கள் மட்டும் கடும் பரிசீலனை யின் பின்னர் கைதிகளின் உறவினர்களுக்கு அனுப் பப்படும்.

ஆனால் கலகொட அத்தே ஞானசார தேரர் விடயத்தில் குறித்த விதி அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது. அவர் தனது வழக்கு தொடர்பாக விமர்ச னங்களை வெளியிட்டுள்ள கடிதம் நேரடியாக ஊடகங் களுக்கு கையளிக்கப்பட்டு ள்ளது.

இதற்கு முன்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர் த்தன எழுதியனுப்பிய கடிதம் ஒன்றும் திவயின பத்திரி கையில் பிரசுரிக்கப்பட்டிரு ந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்று ஒரு தகவல்

## சொன்ன சொல்லும் எறிந்த கல்லும்

இந்த வாய் இருக்கிறதே அது அணு சக்தியைப் போன்றது. அணுசக்தி நல்ல காரியங்களுக்கும் பயன்படும்;அழிவுச் செயல்களுக்கும் உதவும். வாயும் இப்படித்தான்.

தேனொழுகப் பேசிக் காரியத்தை சாதித்துக் கொண்டு போய்விட்டானே என்று சிலர் புலம் புவதைக் காண்கிறோம். நுணலும் தன் வாயால் கெடும் என்ற பழமொழியையும் உணர்ந்திருக்கி றோம்.

திறமை இருந்தும் ஒருவரால் முன்னுக்கு வர முடியவில்லையா?அவர் வாய் தான் அவரது முன்னேற்றமின்மைக்குக் காரணம்.

சிலர் ''நாளைக்கு உன் வீட்டுக்கு வருகிறேன்; நாளைமறுநாள் நீ கேட்ட பணத்தைத் தருகிறேன். உன் வேலைக்கு நானாயிற்று'' என்றெல்லாம் சொல்லிவிட்டு நகர்ந்து விடுவார்கள்.பிறகு அதை மறந்து விடுவது மட்டுமல்ல,நினைவில் இரு ந்தாலும் முக்கியத்துவம் கொடுக்க மாட் டார்கள்.

வாயைப் பொறுத்த அளவில் உணர்ச்சிவசப் படும் பொழுதுதான் நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.செய்வதறியாது–பேசுவதறி யாது குழம்பிப் போய் இருக்கும் அந் நிலையில் வார்த்தைகள் சரமாரியாக வந்து விழும்.பின்னர் அவை வருந்தும் படியான சூழ் நிலையை உண் டாக்கும்.இத்தகைய சூழ்நிலை உண்டாகாதவாறு அவ்விடத்தை விட்டு அகன்று விடுவது நல்லது. நேரம் ஆக ஆகத் தெளிவு பிறக்கும். வார்த் தைகளில் நிதானம் வரும்.வாழ வைப்பது வாய்; வாரி விடுவதும் வாய்தான்.

அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி விடு வது என்பது நாம் குடிக்கப் பயன்படுத்தும் கிண ற்று நீரில் நாமே துப்புவது மாதிரி, என்றாவது அத னைக் குடிக்க வேண்டிவரும் என்று ஏனோ எண் ணுவதில்லை.

இங்கே நான் கேலிப் பேச்சைப் பற்றியும் குறிப் பிட்டாக வேண்டும்.கேலிப் பேச்சு எல்லா நேரங்க ளிலும் சிரிப்பை உண்டாக்குவதில்லை.சில சமயங் களில் விரும்பத்தகாத ஒரு சூழ்நிலையையும் ஏற்படுத்தி விடுகிறது.மற்றவர்கள் விரும்பத்தகாத வார்த்தைகளும் சூழ்நிலையும் நம்மால் ஏற்பட்ட னவாக அமைய வேண்டாம்.

கேலிப் பேச்சு இருவர் இருக்கும் சூழ் நிலையில் உருவாகவில்லை.பலர் இருக்கும் போதுதான் பிறக்கிறது.பலர் முன் சொல்லப்படும் வார்த்தைக ளுக்கு எடை அதிகம். கேலிப் பேச்சின் மூலம் சிலர் மற்றவர் மீது தங்களுக்கு இருக்கும் உரிமையைக் காட்டிக் கொள்ள நினைக்கின்றனர். ஆனால், வெறுப்பும் வேதனையும் தான் மிஞ்சுகின்றன.

பேச்சைப் பொறுத்தவரை நாம் சில விடயங் களை வரையறுத்துக் கொள்வோம்.

குறைவாகப் பேசுவோம்;பயனுள்ளவற்றை பேசுவோம்; சூழ்நிலை அறிந்து பேசுவோம்;ஆகக் கூடியவற்றைப் பேசுவோம்;எண்ணி எண்ணி வருத்தப்படும்படியான சூழ்நிலையை உருவாக் கும் பேச்சுகளைத் தவிர்ப்போம்;வாயிலிருந்து வந்து விட்ட வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போம்;அவற்றைக் காப்பாற்ற முயல்வோம். வாழ்வில் உயர்வோம்.

லேனா தமிழ்வாணன்

# ராஜித சேனாரத்ன குடும்பம் என்னை பழிவாங்க முயற்சி

## மகிந்த ஆவேசம்

அமைச்சர் ராஜித சேனா ரத்னவின் குடும்பம் தன் னைப் பழிவாங்க முயற்சிப்ப தாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆவேச மாக தெரிவித்துள்ளார்.


கடந்த வாரம் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாம் புதல்வர் யோஷித தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

இதனையடுத்து முன்னாள ஜனாதிபதி மகிந்தவின் நுகே கொடை இல்லத்தில் ஏராள மான ஆதரவாளர்கள் நாளா ந்தம் திரண்டு வந்து ஆறுதல் கூறத் தொடங்கியுள்ளனர்.

அவ்வாறு ஆறுதல் கூற வந்தவர்களிடம் அமைச்சர் ராஜித சேனாரத்ன குடும்பத்தி னருக்கு எதிராக மகிந்த பொரிந்து தள்ளியுள்ளார்.

ராஜித குடும்பமே என் னைப் பழிவாங்க முயற்சி செய்கின்றது. அவ்வாறு பழி வாங்கினால் நான் பயந்துவி டுவேன் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

அத்துடன் நான் அவர்க ளின் காலடியில் சரணடை வேன் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் நான் ஒருபோதும் இறங்கி வரமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதித் தேர்தலின் போது பொது வேட்பாளர் ஒரு வரே களமிறக்கப்பட வேண் டும் என்று முதன்முதலில் வலியுறுத்தியதுடன், அவ்வா றான பொது வேட்பாளர் ஒருவ ருக்கு ஆதரவு திரட்டியும், மகிந்தவுக்கு எதிராகவும் சதுர சேனாரத்ன · மாபெரும் கூட்டமொன்றை நடத்திக் காட்டியிருந்தார்.

இப்பொதுக் கூட்டத்தின் மூலமாகவே பொது வேட்பா ளருக்கு ஆதரவாக எதிர்க் கட்சியின் அனைத்து தலை வர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஒரு உடன்பாட் டுக்கு வந்திருந்தன. அத்து டன் அனைத்து அரசியல் தலைவர்களும் பொதுக்கூட் டத்தில் கலந்து கொண்டிரு ந்தனர்.

கொழும்பு, முத்தையா மைதானத்தில் நடைபெற்ற குறித்த கூட்டத்தின் பின்னரே எதிர்க்கட்சியினர் மத்தியில் ஒரு உத்வேகம் பிறந்திருந் தது. அத்துடன் மைத்திரிபால வும் நம்பிக்கையுடன் பொது வேட்பாளராக களமிறங்க முன்வந்திருந்தார்.

மேலும் ஜனாதிபதித் தேர் தல் பிரசாரத்தின் போது பொது வேட்பாளரின் ஊடகப் பேச்சா ளராகவும், ராஜபக்ஷவின ருக்கு எதிரான குற்றச் சாட்டு க்களை ஆதாரத்துடன் முன் வைத்து கடுமையான விமர்ச னங்களை முன்வை த்தும் அமைச்சர் ராஜித பாரிய பங்களிப்பொன்றை வழங் கியிருந்தார். இதன் கார ணமாகவே பொதுமக்களின் கருத்துக்கள் ராஜபக்ஷவின ருக்கு எதிராக திரும்பியது.

அது தொடர்பான பழிவா ங்கும் உணர்வு மகிந்தவின் மனதில் இருந்து கொண் டிருப்பதையே யோஷிதவின் கைதுடன் ராஜித குடும்பத்தி னரை அவர் தொடர்புபடுத்தி விமர்சித்திருப்பதிலிருந்து தெரிய வந்துள்ளது. (இ)

# தேங்காய் உடைக்க சென்றபோது பணத்தைப் பறிகொடுத்த தினேஷ்

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு எதி ராக தேங்காய் உடைக்க சீனி கம ஆலயத்திற்கு சென்றிரு ந்த கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவின் பணப்பை திருட்டு போயுள்ள தாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.



நாடாளுமன்ற உறுப்பி னர் தினேஷ் குணவர்தன வின்பணப்பை மாத்திர மல்லாது ஊடகவியலாளர் உட்பட சில ரது பணப் பைகளும் திருடப்பட் டுள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும் ஆலயத்தில் அருகில் உள்ள உணவகம் ஒன்றில் இருந்து தினேஷ் குணவர்தன உட்பட மேலும் இருவரது பணப்பைகள் கணடு பிடிக்கப்பட்டுள்ளன.

தினேஷ்குணவர்தன வின் பணப்பை காணாமற போயு ள்ளதாக ஒலிப்பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. தினேஷ் குணவரதன எவ்வளவு பணம வைத்திருந்தார் என்பது தெரியவரவில்லை. (இ)

# ஔடதங்கள் அதிகார சபைக்கு உடன் புதிய தலைவர் வேண்டும்

தேசிய ஔடதங்கள் அதி கார சபைக்கு உடன் புதிய தலைவர் ஒருவர் மற்றும் பிர தான நிறைவேற்று அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண் டும் என்று பொது சுகாதார பரிசோ தகர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நடைமுறை அறிவு அற்ற துறை சார்ந்த சிரேஷ்ட நபர் களை அந்தப் பதவிகளுக்கு நியமிப்பதால் பல்வேறு பிரச் சினைகளுக்கு முகங் கொடு க்க நேரிடுவதாக அந்த சங்க ததின்தலைவர்உபுல்ரோஹன தெரிவித்தார்.

நாட்டில் மருந்துகளில் பற்றாக்குறை தன்மை தற் போது ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுள்ள பிரச்சினை களுக்கு பிரதான காரண மாக இருக்கின்ற தேசிய ஔடதங்கள் அதிகார சபை யின் தலைவர் மற்றும் பிர தான நிறைவேற்று அதிகாரி ஆகியோரை அந்தப் பதவிக ளில் இருந்து நீக்கிவிட்டு வெற்றிடத்திற்கு புதியவர் களை நியமிக்க வேண்டும் என்று பொது சுகாதார பரி சோதகர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# சிறுவர் அரங்கம்

1354

# அண்டங்காக்கா!

...தன் அண்ணன்களை எப்படியாவது மீட்டுக் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினாள்.

ஊண் இல்லை. உறக்கம் இல்லை. ஓய்வு இல்லை. கவலையிலேயே நாட்களைக் செலவழித்தாள்.

ஒருநாள் யாருக்கும் தெரியாமல், தன் அண்ணன்களைத் தேடிப் புறப்பட்டு சென்றாள். எங்கிருந்தாலும், எப்பாடு பட்டேனும் அவர்களை மீட்டு வருவேன் என்று உறுதியாக இருந்தாள்.

தாயும், தந்தையும் அவளுக்குக் கொடுத்திருந்த ஒரு.மோதிரம், பசியெடுத்தால் உண்பதற்காக ஒரு ரொட்டி, தாகம் எடுத்தால் அருந்துவதற்காக ஒரு குடுவையில் கொஞ்சம் தண்ணீர், போகிற இடத்தில் உட்கார வேண்டியிருந்தால், பயன்படும் என்று ஒரு முக்காலி என இந்த நான்கை மட்டும் எடுத்துக் கொண்டாள்.

அண்ணன்களைத் தேடி நடந்தாள், நடந்தாள், நடந்து கொண்டே இருந்தாள். உலகத்தின் எல்லைக்கே வந்துவிட்டாள். அங்கே சூரியனைப் பார்த்தாள். அவன் மிகுந்த வெப்பமாகவும், கோபமாகவும் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அதனால் அவனை விட்டுவிட்டு மேலும் சென்றாள்.

சந்திரனைப் பார்த்தாள். அதுவோ சில்லென்றும், குளிர்ச்சியாகவும் இருந்தது. 'இங்கே ரத்தமும், சதையும் தான் இருக்கிறது என்று நினைத்தபடியே மேலும் சென்றாள்.

அங்கே விண்மீன்கள் இருந்தன. அவை இருக்கைகள் மீது அமர்ந்திருந்தன. இவள் கதையைக் கேட்டு



காலை எழும் வெள்ளிமீன், ஒரு சின்ன மரத்துண்டைக் கொடுத்து, "இதைப் பத்திரமாக வைத்திரு. நீ இதனை இழந்தால், தூரத்தில் இருக்கும் அந்தக் கண்ணாடி மலையின் மேலுள்ள கோட்டையை உன்னால் திறக்க முடியாது. அங்கேதான் உன் அண்ணன்கள் இருக்கின்றனர்," என்றது.

சிறுமி அந்த மரத்துண்டை ஒரு துணியில் சுற்றி கையில் எடுத்துக் கொண்டு சென்றாள். கண்ணாடி மலையை அடைந்தாள். அதன் கதவுகள் மூடியிருந்தன. அவளுக்கு அந்த மரத்துண்டு நினைவுக்கு வந்தது. கையிலிருந்த துணியைப் பிரித்தாள்.

"ஐயோ" அந்த மரத்துண்டு அங்கே இல்லையே... மிகுந்த வருத்தம் கொண்டாள். நல்ல வெள்ளி மீன் நமக்குக் கொடுத்த பரிசை இழந்து விட்டோமே' என்று கவலைப் பட்டாள்.

தன் அண்ணன்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். கையிலோ கண்ணாடி மலையிலுள்ள கோட்டையைத் திறக்க உதவும் மரத்துண்டு இல்லை. என்ன செய்வது? என்று யோசித்தாள். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள்.

அந்த மரத்துண்டு தன் சுண்டுவிரல் அளவு தான் இருக்கும் என்பது நினைவுக்கு வந்தது. ஒரு கத்தியை எடுத்துச் சிறிதும் தயங்காமல் தன் சுண்டு விரலை வெட்டினாள். கதவில் செருகிச் சுற்றினாள். என்ன வியப்பு.

அந்தக் கதவு திறந்து கொண்டது. உள்ளே நுழைந்தாள். அங்கே ஒரு குள்ளன் இருந்தான்.

'எதைத்தேடி இங்கே வந்தாய்?" என்று கேட்டான்.

"ஏழு காகங்களாக மாறியுள்ள என் அண்ணன்களைத் தேடி வந்திருக்கிறேன்," என்றாள்.

உடனே குள்ளன், "என்னுடைய முதலாளிகள் அவர்கள். வெளியே போயிருக்கின்றனர். தயவு செய்து உள்ளே வந்து சிறிது நேரம் அமருங்கள்," என்றான்.

அவன் உள்ளே சென்று அந்த ஏழு பேருக்கும் சாப்பாடு தயார் செய்தான். ஏழு சிறிய தட்டுகளில் அவற்றை வைத்தான். சின்னச் சின்ன கண்ணாடிக் குவளையில் தண்ணீர் கொண்டு வைத்தான்.

மேசையில் அடுக்கி வைத்திருந்த அந்தத் தட்டுகளிலிருந்து கொஞ்சம் உணவையும், ஒவ்வொரு குவளைகளிலிருந்தும் சிறிது தண்ணீரையும் உண்டாள்.

கடைசிக் குவளையில் தன் கையிலிருந்த மோதிரத்தை நழுவ விட்டாள்.

திடீரென்று காற்றில் படபடப்பும், காகங்கள் கரைகின்ற ஒலியும் கேட்டன.

"இதோ என் முதலாளிகள் வந்துவிட்டனர்,' என்றான் குள்ளன்.

இதைக் கேட்டதும், அவள் உள்ளே சென்று ஒளிந்து கொண்டாள்.

உள்ளே நுழைந்த அவர்கள் உணவைச் சாப்பிட ஆரம்பித்தனர். தண்ணீரையும் குடித்தனர். அப்போது ஒவ்வொருவராக, "என் தட்டிலிருந்து யாரோ சாப்பிட்டிருக்கிறார்கள். யாரது? என் குவளையிலிருந்து யாரோ தண்ணீர் குடித்திருக்கிறார்கள் யாரது?" என்று கேட்டனர்.

ஏழாவது குவளையின் அடியில் மோதிரம் ஒன்று இருப்பதை ஏழாவது காகம் பார்த்தது. அது தங்களுடைய தாய், தந்தையரின் மோதிரம் என்பதை அறிந்தது.

"ஆ, நம் தங்கை இங்கே வந்திருக்க வேண்டும். இனி, நாம் விடுதலை ஆகி விடுவோம்," என்றது.

அப்போது ஒளிந்திருந்த தங்கை அதைக் கேட்டு வேகமாக ஓடிவந்தாள். அந்தக் கணத்திலேயே, அத்தனைக் காகங்களும் தங்களுடைய சொந்த உருவத்தைப் பெற்றன.

ஏழு அண்ணன்களும் ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக் கொண்டனர். அனைவரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். தங்கையை உடன் அழைத்துக்கொண்டு, வீடு திரும்பினர். அன்று முதல் அவர்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

(தொடரும்)

02.2016
08

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1587 - இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத்தை கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு ஸ்கொட்லாந்து அரசி முதலாம் மேரி தூக்கிலிடப்பட்டாள்.
- 1622 - இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் மன்னன் இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தைக் கலைதான்.
- 1761 - லண்டனில் நிலநடுக்கம் பதியப்பட்டது.
- 1849 - புதிய ரோமன் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1900 - போவர் போர்: தென்னாபிரிக்காவில் லேடிஸ மித் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள் போவர்களினால் தோற்கடிக்கப்பட்டனர.
- 1904 - சீனாவின் லூஷெனிகோ நகரை ஜப்பான் தாக்கியது.
- 1924 - ஐக்கிய அமெரிக்காவில் மரண தண்டனைகளுக்கு முதற் தடவையாக நச்சு வாயுவை பயன்படுத்தும் முறை நெவாடாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1942 - ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் நேதாஜி ஜேர்மனியை விட்டுத் தெற்காசியாவுக்குப் புறப்பட்டார்.
- 1956 - இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் களனி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
- 1963 - கியூபாவுடனான போக்குவரத்து, பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்க மக்களுக்கு தடை செய்யப்பட்டதாக ஜனாதிபதி ஜோன் எஃப். கெனடி அறிவித்தார்.
- 1971 - நாஸ்டாக் பங்குச்சந்தைக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1974 - 84 நாட்கள் விண்ணில் சஞ்சரித்த பின்னர் முதலாவது அமெரிக்க விண்வெளி ஆய்வு கூட ஸ்கைலாப் 4 வீரர்கள் பூமி திரும்பினர்.
- 1974 - அப்பர் வோல்ட்டாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 2005 - இஸ்ரேலும் பாலஸ்தீனமும் போர்நிறுத்தத்திற்கு உடன்பட்டன.

### பிறப்புகள்

- 1700 - டானியல் பேர்னோலி, கணிதவியலாளர் (இ. 1782)
- 1828 - ஜூல்ஸ் வேர்ன், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1905)
- 1834 - திமீத்ரி மெண்டெலீவ், ரஷ்ய வேதியியலாளர் (இ. 1907)
- 1897 - ஜாகீர் உசேன், இந்தியாவின் மூன்றாவது குடியரசுத் தலைவர் (இ. 1969)

### இறப்புகள்


- 1804 - ஜோசப் பிரீஸ்ட்லி, ஆங்கிலேய வேதியியல் அறிஞர் (பி. 1733)
- 1889 - சொலமன் ஜோன்பிள்ளை, எழுத்தாளர், சிலோன பேட்ரியட் பத்திரிகையின் ஆசிரியர்
- 1975 - ரொபர்ட் ரொபின்சன், நோபல் பரிசு பெற்ற பிரிதானிய வேதியியலாளர் (பி. 1886)
- 1993 - நா. சண்முகதாசன், ஈழத்தமிழ்த் தொழிற்சங்க வாதி, அரசியல்வாதி (பி. 1920)

### சிறப்பு நாள்

- பரிநிர்வாண நாள் - பௌத்த வழிபாட்டு தினம்

# சரத் பொன்சேகாவுக்கு எம்.பி.பதவி வழங்கினால் வழக்குத் தொடுப்போம்

## கூட்டு எதிர்க்கட்சி போர்க்கொடி



எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்தனவின் மறைவையடுத்து வெற்றி டமாகியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி யின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அந்த கட்சியின் பொதுச் செயலாளரின் பரிந் துரைக்கு அமைய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு கொடுத்தால், தேர்தல் ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துளளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவி அந்த பட்டியலில் உள்ள தகுதியா னவருக்கு வழங்கப்பட வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சி கூறுகிறது.

சரத் பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை. அந்த கட்சி யின் தேசிய பட்டியலிலும் அவர் இல்லை.

இவ்வாறான பின்னணியில் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பி னர் பதவியை வழங்குவது சட்ட விரோதமானது என கூட்டு எதிர்க் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் சரத் பொன்சேகாவின் நியமனத்தை ஏற்றுக்கொள்வதற்கு இருக்கும் ஒரே காரணம் அவரும் பொன்சேகாவும் ஒரே ஊர் மற்றும் உறவு முறை மாத்திரமே.

சட்டவிரோதமாக, நாட்டின் நாடாளுமன்ற முறைமைக்கு தவறான முன்னுதாரணத்தை வழ ங்கி, ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் அடுத்துள்ள அரசியல்வாதியின் சிறப்புரிமைகளை மீறி இந்த நியமனத்தை வழங்கினால், வழக்குத் தாக்கல் செய்வதற்காக ஆவணங்களை தாம் தயார்ப்படுத்தியிருப்பதாகவும் அந்த பேச்சாளர் தெரிவித்தார்.

எது எப்படி இருந்த பொழுதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானத்தில் தலையீடு செய்ய வேறு தரப்பினருக்கு அதிகாரம் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கையில் தேடப்படும் 10 பேர் பிரித்தானியாவில்

இலங்கையில் தேடப்பட்டு வரும் தீவிரவாதிகள் மற்றும் மிகப் பெரிய மோசடியாளர்கள் 10 பேர் பிரித்தானியாவில் வாழ்ந்து வருவதாகவும், அவர்களை கைது செய்ய சர்வதேச பொலிஸார், ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வந்த லலித் கொத்தலாவவின் மனைவி சிசிலியா கொத்தலாவல லண்டனில் வசித்து வந்த நிலையில், பாதுகாப்பாக இலங்கை திரும்பியிருந்தன் மூலம் இது தெரிய வந்துள்ளது.

இவரை சர்வதேச பொலிஸார் தேடி வருகின்றனர் என்பது லண்டன் ஹித்ரோ விமான நிலையத்தின் ஸ்கொட் லாந்து யார்ட் பொலிஸாரின் கணனிப் பிரிவில் பதிவா கியுள்ளது.

விடுதலைப புலிகளின் அரச சார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் தலைவர் ரெஜி, வைப்பா ளர்களின் பணத்தை மோசடி செய்த வங்கி யாளர்கள் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டு தேட ப்பட்டு வரும் இலங்கையர்கள் லண்டனில் வசித்து வருகின்றனர்.

அதேபோல் இலங்கையால் தேடப்பட்டு வரும் தர்மராஜன் என்பவர் பிரான்ஸின் பாரிஸ் நகரில் வசித்து வரு வதுடன், அவருக்கு எதிராகவும் சர்வதேச பொலிஸார் பிடி விராந்து பிறப்பித்துள்ள போதிலும் கைது செய்ய நடவடிக்கை எடுககவில்லை என அந்த சிங்கள ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (இ)

# காணி விவகாரங்களுக்கான வங்கியை ஸ்தாபிக்க தீர்மானம்

காணி விவகாரங்களுக்கான வங்கியொன்றை ஸ்தாபிப்பதற்கு காணி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும், பயன்படுத்தப்படாத காணிகள் தொடர்பான தகவல்களை கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச மற்றும் மாவட்ட செயலாளர்கள் ஊடாக பெற்றுக்கொள்ளவுள்ளதாக காணி இராஜாங்க அமைச்சர் டி.பி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்

நாட்டின் சகல மாவட்டங்களிலும் காணிகள் தொடர்பான தரவுகளை கணனிமயப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

காணியொன்றை தனியாரிடமிருந்தே மக்கள் கொள்வனவு செய்யும் நடைமுறை இதுவரை காலமும் இருந்து வருகின்ற நிலைமையின் கீழ், அரசாங்கத்திடமிருந்தும் காணிக் கொள்வனவை முன்னெடுப்பதற்கான வழிமுறைகள் தயாரிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று வெளிநாடுகளில் தொழில் புரிகின்றவர்கள் அங்கிருந்தவாறே தமது நாட்டில் தமக்கான காணிகளை கொள்வனவு செய்வதற்கும் இயலுமான வழிமுறைகள் தயாரிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க மேலும் சுட்டிக்காட்டினார். (இ)

# பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு தொல்லை கொடுக்கும் பிரசன்ன

மேல்மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்கவின் மீது அயல்வீட்டில் வசிக்கும் பெண் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

தமது அதிகாரத்தை பயன்படுத்தி பிரசன்ன ரணதுங்க, தொந்தரவுகளை மேற்கொண்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ரஞ்சீவிஎன்ற இந்தப்பெண, ஏற்கனவே பிரசன்ன தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

அதில் தமது வீட்டுக்கு அருகில் உள்ள நகரசபைக்கு சொந்தமான காணிகளை பலாத்காரமாக பிரசன்ன கையகப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமது வாகனங்களை நிறுத்துவதற்காக இந்த காணி கையகப்படுத்தப்பட்டதாகவும் குறித்த பெண் முறையிட்டுள்ளார். (இ)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 626

Search for people, places and things  Nagendram  Home

### திவா கோபி

வார்த்தைகளே இல்லாத வடிவம்
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலம் இல்லாத இதயம்
வெறுப்பை காட்டாத முகம்...
அம்மா...

### சுபா மகேஸ்

நல்ல மனைவி அமைவதெல்லாம் கடவுள் கொடுத்த வரம் அல்ல..



அவளின் பெற்றோர்கள் வளர்த்த விதம்..

### தபஸ்வினி

முதியோர் இல்லத்திற்கு
பணம் கொடு
பொருள் கொடு
உணவு கொடு
உடை கொடு
உன் பெற்றோரை
கொடுத்து விடாதே!!!



படித்ததில் பிடித்தது ......

### தேவன் நிரு




### கார்த்தி நாதன்

வெளிநாட்டு வாழ்க்கை
"உழைக்க வேண்டிய வயசு இதுதானடா"
என்று விமானம் ஏறி வந்தோம்,
வாழ வேண்டிய வயதும் இதுதான் என்பதை மறந்து.....

### சந்திரன் சிந்து




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கை பொலிஸ் மீதான குற்றச்சாட்டு; மிகத் தெளிவான ஒரு குற்றப்பத்திரிகை

## பொலிஸாருக்கெதிராக மூன்று மாதங்களில் 752 முறைப்பாடுகள்

...இந்த விதமான நிலைமைகளில் இடம் பெறும் பிரச்சினையான விடயமொன்று தகுந்த விதமாக சுட்டிக்காட்டி அறிவுறுத்தப்படுமானால் அதுவே சீர்திருத்த மொன்றுக்கான அடியெ டுத்துக்கொடுக்கும் பயனுள்ள முயற்சி யாகவும் அமையக் கூடும். பொலிஸ் சேவை யில் மிகவும் பாதுகாப் பான முறையிலும் இரகசியமாகவும் இடம் பெறக்கூடிய மக்கள் விரோத துஷ்பிரயோக நடவடிக்கைகள் பற்றி ஒருவரோ அல்லது ஒருசிலரோகூட வெளிக் கொண்டு வருவதற்கு அவர்கள் நிபுணர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இவ்விதமாக, பொலிஸ் சேவையிலேயே இடம் பெறக்கூடிய சட்டவிரோத பாதாள உலக நடை முறைத் தீமைகளும் வெளிக்கொண்டு வரப்படலாம்.

அடுத்துவரும் வாரங்களில் பொது மக்களின் மனித உரிமைகளுக்கெதிரான பொலிஸ் அத்துமீறல் களுக்கு சவாலான விதத்தில் அவர்களுக் கெதிரான வழக்கொன்றை நீதிமன்றத்தில் பொது மக்கள் சார்பாக தாக்கல் செய்வதற்கு சட்டத் தரணிகள் கொண்ட குழுவொன்று தயாராகி வருகிறது.

''சட்டம்- ஒழுங்கு' பேண வேண்டிய பொலி சாரினாலேயே பொது மக்களின் மனித உரிமைகள் தொடர்ச்சி யான முறையில் பல தடவைகள் மீறப்பட்டு வருவதாக சண்டே லீடர் பத்திரியையுடனான உரையாடல் ஒன்றின் போது துஷாரா எஸ்.டாஸ் [illegible]

[illegible] 20

''மனித உரிமைகள் வழக்கொன்றில் பொலி ஸார் நடந்துகொள்ளும் விதம் குறித்து நடை முறை ஒழுங்குகள் பற்றிய அறிவுறுத்தலொன்று உச்ச நீதிமன்றத்தினால் அவர்களுக்கு ஆணை யாக பிறப்பிக்கப்பட வேண்டும். இந்த வகை யில் பிந்திய சம்பவமான எம்பிலிப் பிட்டிய இளை ஞன் கொலை வழக்கு உள்ளிட்ட 70 வழக்குகள் இந்த முறையில் தாக்கல் செய்யப்படவுள்ளன'' என அவர் கூறியிருந்தார்.

அதேநேரம் வட மாகாண சபை சம்பந்த மாக இவ்விடயங்கள் குறித்து அவர் தனது கருத்தினை வெளிப்படுத் துகையில் அதனூடாக தமிழ் மக்கள் எந்தவித நீதியையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என்றே குறிப்பிட்டுக் கூறியிருந்தார்.

''பொலிசாருக்கெதி ராக எந்தவித நடவடிக்கை யையும் எடுப்பதற்கு தமக்கு அதிகாரமெதுவு மில்லை என வடமாகாண சபை செயலர் மிகவும் தெளிவாகவே எமக்கு கூறியுள்ளார். பொலிஸ் பணிக்குரிய உள்ளூர் விவகாரங்கள் மட்டிலேயே பொலிஸை செயற்படுத் தும் அதிகாரம் மட்டுமே அவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது. ஆகையால், பொலிசாரின் மனித உரிமை மீறல்கள் மட்டில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை. எனவே, இவர்கள் மூலம் மக்கள் நன்மையடைவார் கள் என்ற நம்பிக்கை எமக்கில்லை.

இதற்கும் மேலாக பொலிசாரின் மனித உரிமை மீறல்கள் மட்டில் அவர்களிடமே அறிக்கை கோரும் வடமாகாண சபையின் இவ்வித செயற்பாடுகள் கேலிக் கிடமானதே. இப்படியான சூழ்நிலைகளில் மக் களின் நலன் களுக்காக மாகாண சபை பயனு ள்ளபடி செயற்படுவதற்கு வழிகளெதுவுமில்லை'' என அவர் மேலும் கூறினார்.

அப்படியானால் அவர் என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று உத்தேசித்திருப்பதாக கேட்டபோது வடமாகாண சபை உருப்படியாக எதுவும் செய்யும் என்ற நம்பிக்கை தமக்கு இல்லாதபடியால் உச்ச நீதிமன்றத்தின் தலை யீட்டையே தாம் கோர விருப்பதாக அவர் கூறினார்.

''குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல் விடயங் களை எப்படிக் கையாள் வது என்ற சரியான வழிப் படுத்தல்கள் இல்லாத போதிலுங்கூட நாம் பொலிசாரை குறை கூறுவதால் எதிர்காலத் திற்குமான சரியான வழிகாட்டுதல்களுக் காகவும் தவறுகள் மீண்டும் நிகழாவண்ணம் தடுப்பதற்கான எதிர்கால வழிமுறைகளுக்கான வழிகாட்டியாக உச்சநீதி மன்றமொன்றின் சட்ட ரீதி யான ஆணையொன்றே சிறப்பானதாயிருக்கும். பொதுமக்கள் மீது ஏற் படுத்தப்படக்கூடிய துன்புறுத்தல்களை தடுப்பதற்காக குற்றச் செயல் மட்டில் விசா ரணைகள் மேற்கொள் வது மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது எப்படி என்பதற்கான புதிய ஆலோசனைகளைப் பெறும்பொருட்டு உச்சநீதி மன்றத்தில் வழக்கொன் றைத் தாக்கல் செய்து தீர்வொன்றைப் பெறுவது பொலிசாருக்கும் ஆரோ க்கியமான ஒன்றாகவே இருக்கும்'' என்பதே அவரது கூற்று.

அதேநேரம் சண்டே லீடர் பத்திரிகையாளர் களுடன் மேற்கொண்ட உரையாடலொன்றின் போது எம்பிலிப்பிட்டிய சம்பவத்தைக் குறிப்பிட்ட உயர்நீதிமன்ற சட்டத் தரணியாகிய உதுல் பிரேமரட்ண, இறந்தவரின் மரண அறிக்கை கிடைத் ததும் குற்றம் புரிந்த வர்கள் கைது செய்யப் படுவர் என்று கருத்துக் கூறிய பொலிஸ் ஊடகப் பேச்சாளரது பேச்சு முற்றிலும் சட்டத்திற்கு முரணானது என சுட்டிக் காட்டியிருந்தார்.

''அன்று நடந்த சம்பவத்திற்கு கண்ணால் கண்ட சாட்சிகள் உண் டென்பதால் அவர் கூறியது முற்றிலும் சட்டத்திற்கு முரணா னதே!'' என வலியுறுத் திக் கூறியிருந்தார்.

''பொதுமக்களின் உரிமைகள், நலன்களின் பொருட்டு பொலி சாரு க்கு எதிராக சட்டத்தரணி கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவிருக்கும் மனித உரிமை மீறல் வழக்கு மட்டில் வட மாகாண சபை சம்பந்த மாக அவர் மேலும் பேசும்போது வடமாகாண சபை நியமிக்கப்பட்டது ஒரு விடயம், பொலிஸ் அதற்குப் புறம்பாக சுதந்திரமாக இயங்குவது மற்றுமொரு விடய மொன்று கூறியதன் மூலம் அரசாங்கம் இவ்விடயத்தை இப்போது வடமாகாண சபை மட்டத்தில் கைகழுவ முயற்சிக்கிறது'' என்றும் கூறும் அவர், ''எப்படியும் எந்தவொரு பொலிஸ் அதிகாரியையும் கைது செய்ய ஆணையிடும் அதிகாரம் தமக்கு இல்லை என்றே கூறும் வடமாகாண சபை தமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றிய தெளிவற்ற நிலையையே தொடர்வதாகவும் கூறுகிறது.

அப்படியானால் பொலிசார் நி1கழ்த்தும் அட்டுழியங்கள் மட்டில் பொறுப்புக்கூற வேண்டி யவர்கள் யார்? இங்கு பந்தானது ஒருவரிட மிருந்து மற்றுமொரு வருக்கென மாறிமாறி அடிக்கப்பட்டுக் கொண்டி ருப்பதுடன் இறுதியில் பொறுப்பினை எவரும் கையேற்காத நிலையே எஞ்சுகிறது. ஆனாலும் இதுமட்டில் லான பெரிய பிரச்சினை என்னவென் றால் சட்டம் ஆட்சியாளர் களது கையில் இருப்ப தால் வேறு எவர்மீதும் இது மட்டில் குறைகூற முடியாது.



**சண்டே லீடர் பத்திரிகையில் ''இலங்கை பொலிஸ் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு மிகத் தெளிவான ஒரு குற்றப்பத்திரிகை'' எனும் தலைப்பில் கெமிலியா நெத்தானியல் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...**

# கொஞ்சம் நேர்மை அதிக வருமானம்

**தொழில் ரகசியம்**

வாய்மையே வெல்லும். நேர்மையே வெற்றி. உண்மையே ஜெயம்.

என்ன திடீரென்று இன்று ஒரு தகவல் -போல் உள்ளது என்று யோசிக்காதீர்கள். தொழில் ரகசியத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று குழம்பாதீர்கள்.

சந்தைப்படுத்தலிலும், விற்பனையிலும் கொஞ்சம் வாய்மை, நேர்மை, உண்மையை சாஸ்திரத்திற்கு உபயோகித்து அதன்பின் உங்கள் கைவரிசையை தாராளமாக காட்டினால் நினைத்தது கை கூடும். விற்பனை பெருகும். லாபம் கொட்டும். இது சந்தைப்படுத்தல் உத்தி. விற்பனை தந்திரம். இதை உளவியல் சாத்தியப்படுத்துகிறது.

விடயம் தெரிந்த விற்பனையாளர்கள் காலகாலமாக உபயோகிக்கும் ரெக்னிக் இது. விற்பனையை ஆரம்பிக்கும்போது தொடக்கத்திற்கு நேர்மையாக இருந்து, கொஞ்சம் உண்மையை பேசினால் போதும், வாடிக்கையாளர் அவரை முழுமையாய் நம்பத் தொடங்குவார். 'இவர் தனக்கு சாதகமாக இல்லாமல் எனக்கு சாதகமாக பேசுகிறாரே. இவரை முழுமையாய் நம்பலாம்' என்று நினைப்பார். அதன் பின் விற்பனையாளர் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவார். பின் வாடிக்கையாளர் தலை விற்பனையாளர் ஆதிக்கத்திற்கு வந்துவிடும். இனி உங்கள் பாட்டுக்கு வாசிக்கலாம்.

வாடிக்கையாளர் மொட்டை தலைக்கும் வளமையான விற்பனைக்கும் முடிச்சு போட முடியுமா? லாபம் அதிகரிக்கும் அளவிற்கு தொடர்பு உண்டா? நல்லா முடியும். தாராளமாய் உண்டு. வாடிக்கையாளரிடம் பேசும் போது அவர்களுக்கு சாதகமாகவும், நமக்கே சற்று ஆப்பு வைக்கும் படியும் பேச ஆரம்பிக்க வேண்டும். இப்படி செய்யும் போது நாம் நேர்மையானவர் போல் வாடிக்கையாளருக்குத் தோன்றும்.

சில பிராண்டுகள் தங்கள் விளம்பரங்களில் தங்களிடமுள்ள குறைகளை கோடிட்டு காட்டும். அதாக்கும், இதாக்கும், அதைச் செய்வேன் இதை முடிப்பேன்' என்று விளம்பரம் சொல்லக் கேட்டே பழகிவிட்ட வாடிக்கையாளர் மனதை இது கவரும். அட, என்ன சொல்கிறார்கள் என்று கேட்கத் தோன்றும். உண்மை பேசும் பிராண்ட் போல் இருக்கிறதே, மற்ற பிராண்டுகளுக்கு இது பரவாயில்லை என்று எண்ணத் தோன்றும். விளம்பரத்தின் நோக்கமே இது தானே. அது செவ்வனே செய்யப்படும்!

உதாரணத்திற்கு 'லிஸ்டரின்' மவுத்வாஷ் பிராண்டை எடுத்துக்கொள்வோம். இது வாயை கொப்பளிக்க உதவும் பொருள் பிரிவைச் சேர்ந்தது. வாயிலுள்ள கிருமிகளை நீக்கி வாயை துர்நாற்றம் இல்லாமல் வைக்கும் பிராண்ட். இதன் போட்டியாளர்கள் அனைவரும் இதைக் கூறி அதோடு தங்கள் பிராண்ட் கொப்பளிக்க டேஸ்ட்டாய் இருக்கும், ஸ்வீட்டாய் இருக்கும் என்று விளம்பரப்படுத்துகின்றன. ஆனால் லிஸ்டரின் 'காலை மாலை வேண்டா வெறுப்பாய் நீங்கள் உபயோகிக்கும் சுவை கொண்டது' என்று விளம்பரப்படுத்துகிறது.

இதை கேட்க ஆச்சரியமாய் இருக்கிறதில்லையா? என்ன சொல்ல வருகிறார்கள் என்று கேட்கத் தோன்றுகிறதில்லையா. லிஸ்டரின் தொடர்ந்து 'எங்கள் மவுத்வாஷ் கசக்கும் ஏனெனில் இது மருந்து. மருந்தால் மட்டுமே கிருமிகளைக் கொல்ல முடியும்.



அதை திறம்பட செய்யும். அதனால் வாய் நாற்றமில்லாமல் புத்துணர்ச்சியுடன் இருக்கும்' என்கிறது.

வாடிக்கையாளர்கள் 'கரெக்ட், மவுத்வாஷ் டேஸ்ட்டாய் இருந்தால் எப்படி மருந்தாக இருக்க முடியும்? அவை மருந்தில்லை என்றால் எப்படிக் கிருமிகளை கொல்ல முடியும், சரியான ஏமாற்று பேர்வழிகள்' என்று மற்றவைகளை ஒதுக்கி லிஸ்டரின் வாங்குகிறார்கள். இதனால் கிருமிகளோடு போட்டியையும் சேர்த்து போட்டுத் தள்ளுகிறது லிஸ்டரின். இப்படி கூறியே உலகின் லீடிங் மவுத்வாஷ் பிராண்டாக திகழ்கிறது. சின்னதாய் உண்மை பேசி சிறப்பாய் லாபம் கட்டுகிறது!

'லாரியல்' விலை கூடுதலான காஸ்மெடிக்ஸ் பிராண்ட். தன் விளம்பரங்களில் 'எங்கள் விலை சற்று அதிகம்தான். ஆனால் வெர்த இட்' என்கிறது. இதை பார்க்கும் மேல்தட்டு பெண்களுக்கு 'விலை அதிகமென்றால் பொருள் நன்றாக இருக்கும். நம் ஸ்டேட சுக்கு ஏற்ற பிராண்ட்' என்று அதை விரும்புகிறார்கள். வாங்குகிறா ர்கள்.

' மார்க்கெட்டரை விடுங்கள், கார் புரோக்கர், வீட்டு புரோக்கர், விற்பனையாளர் கூட இந்த டெக்னிக்கை பயன்படுத்தி பயனடையலாம். ஹோட்டல் சர்வர் உட்பட!

அரிசோனா பல்கலைக்கழக' மார்க்கெட்டிங் மற்றும் உளவியல் பேராசிரியர் 'ராபர்ட் சியால்டினி' தான் பார்த்த ஒரு ஹோட்டல் சர்வரின் சாமர்த்தியத்தை 'Influence' என்ற தன் அருமையான புத்தகத்தில் அழகாக விளக்குகிறார்.

சர்வர்களுக்கு பெரிய சம்பளம் கிடையாது. ஒழுங்காய் சேவை செய்து டிப்ஸ் வாங்கி சம்பாதித்துக்கொள் என்பார்கள் முதலாளிகள். சியால்டினி குறிப்பிடும் அந்த சர்வரின் பெயர் வின்சென்ட். அந்த ஹோட்டலிலேயே அதிகமாக டிப்ஸ் வாங்குபவர் அவர்தான். அந்த ஹோட்டல் முதலாளியே அங்கு சாப்பிட்டால் அவருக்கு டிப்ஸ் தருவார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஒரு பெரிய குடும்பமோ, நண்பர் படையோ ஹோட்டலுக்கு வந்து உட்கார்ந்து மெனு கார்டை பரிட்சைக்கு சேர்ந்து க்ரூப் ஸ்டடி செய்வது போல் அரை மணி நேரம் படித்து நெட்ரு செய்தபின் வின்சென்ட் அந்த டேபிளில் ஆஜர் ஆவார்.

பிள்ளையார் சுழி போடுவது போல் சாப்பிடும் முன் கொறிக்கும் ஸ்டாடர்ஸை ஒருவர் ஓர்டர் செய்ய வின்சென்ட் கண்ணை சுருக்கி தாடையை தடவி மெதுவாக 'நான் சொல்லக் கூடாது. இருந்தாலும் சொல்றேன். நீங்க ஓர்டர் பண்ற ஐட்டம் எப்பவுமே இங்க நல்லா இருக்கும். ஆனா இன்னைக்கு கொஞ்சம் சுமாராத்தான் இருக்கு, சாரி' என்று கூறி இன்னொரு ஐட்டம் பெயரை கூறி 'இது இன்னைக்கு நல்லா இருக்கு' என்பார்.

அவர் கூறிய ஐட்டம் விலை வந்தவர் ஓர்டர் செய்ததை விட கம்மியாய் இருக்கும். வந்தவர்களுக்கு தாங்கள் கேட்டது கிடைக்கவில்லை என்று கோபம் வராது. பதிலுக்கு வின்சென்ட் மேல் மதிப்புதான் வரும். நல்ல ஐட்டமாக ஆலோசனை செய்கிறார், விலை குறைவான ஐட்டமாகவும் கூறுகிறார். பில்லுக்கு ஏற்ற டிப்ஸ் பற்றி கவலைப்படாமல் நமக்கு நல்லதை சொல்கிறார். இவர் நேர்மையாளர். எவ்வளோ அடிச்சாலும் தாங்குவான் போலிருக்கு, இவன் ரொம்ப நல்லவண்டா என்பது போல் வின்சென்ட் மேல் ஒரு மரியாதை வந்துவிடும்.

பிறகு அந்த கூட்டம் எங்கே தானே ஓர்டர் செய்யப்போகிறது. வின்சென்டை விளித்து 'உங்களுக்கு தான் எது நன்றாக இருக்கும் என்று தெரியுமே, நீங்களே சொல்லுங்கள்' என்று ஆளாளுக்கு கேட்கத் தொடங்குவார்கள். அதன் பின் சாப்பிட்டு வெற்றிலைப் பாக்கு போடும் வரை வின்சென்ட் சொல்வதுதான் வேத வாக்கு!

அதோடு விடமாட்டார் வின்சென்ட். வந்தவர்கள் சாப்பிட்டு பில் கேட்கும் போது 'அது எப்படி' என்று உரிமையோடு ஒரு ஒயின் பெயரை கூறி 'சாப்பிட்டு இத ஒரு ரவுண்ட் உள்ள தள்ளுங்க. போற வழில சொர்க்கம் தெரியலன்னா வந்து ஏண்டான்னு என்னை கேளுங்க' என்பார். வந்தவர்களும் எதற்கு குறை என்று ஒயினை ஓர்டர் செய்து குடித்து, வின்சென்ட்க்கு சொத்தை எழுதி தருவது போல் டிப்ஸ் கொடுத்து சொர்க்கம் தெரியும்னாரே என்று ஆடிக்கொண்டே தேடிக்கொண்டு போவார்கள்.

இப்படியே சமயோஜிதமாய் பேசி சப்ஜாடாய் டிப்ஸை அள்ளுகிறாராம் வின்சென்ட். இந்நேரம் வேலை செய்யும் ஹோட்டலை யே அவர் விலைக்கு வாங்கி இருந்தாலும் ஆச்சரியப்படுவ தற்கில்லை!

சின்ன விடயத்தில் நேர்மையை சின்ன லெவலில் காட்டினால் மக்கள் மனதில் நேர்மையாளனாய் தெரிவீர்கள். அதன் பின் பெரிய விடயங்களை நீங்கள் பேசும் போது கேட்பவர்கள் நீங்கள் சொல்வதை முழுவதும் நம்புவார்கள்.

சின்னி கல்லு பெத்த லாபம்!




## சன்குவிக் வாடிக்கையாளர்களுக்கு 100 சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்

சன்குவிக்கின் வருடாந்த வாடிக்கையாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. ஜனவரி மாதத்தில் இருந்து "பருகுங்கள் - வெல்லுங்கள்" என்ற சன்குவிக் ஊக்குவிப்புத் திட்டம் நடைபெறுகிறது.

2016 ஜனவரி 21 ஆம் திகதியுடன் ஆரம்பமாகும் பாரியளவிலான விற்பனை அபிவிருத்தி நடவடிக்கைகள் 2016 மார்ச் 23 வரை தொடர்ந்து நடைபெறும். இதில் பங்குபற்றுபவர்கள் புத்தம் புதிய இரட்டைக் கதவு சிசில் குளிர்சாதனப் பெட்டியை வென்றெடுக்கும் வாய்ப்பை பெறுவார்கள்.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கு, சன்குவிக் போத்தலின் மூடியிலுள்ள பிளாஸ்டிக் முத்திரையில் வாடிக்கையாளர்கள் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பனவற்றை எழுதி, சன்குவிக் பருகுங்கள் வெல்லுங்கள், த.பெ. இல. 161, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,382.24 | 6,340.05 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,302.01 | 3,315.36 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,265.092 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** மல்ரி பினான்ஸ்(15.60), உடப்புசலாவ(26.10), போகல காபைட்(35.10), எல்பிட்டிய(19.50), பீப்பள்ஸ் இன்ஸ்(17.30)

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** எஸ்.எம்.பி லீசிங்(0.30), புளூ டைமன்ட்(0.40), குட் ஹோப்(1,217.10), லங்கா செரமிக்(102.20), ஈகுவிட்டி ரூ(53.50).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## கவலையளிக்கும் ரோபோக்களின் பெருக்கம்

ரஜனி நடிக்கும் படம் வெளியாகும் முன்னரே உலகின் கவனத்தை ஈர்த்துவிட்டார் என ரஜினி ரசிகர்கள் பெருமைப்பட வேண்டாம். தொழில் துறையில் எந்திரமயமாக்கல்தான் (ரோபோ) உலக பொருளாதார மையத்தில் பங்கேற்ற தலை வரகளை கவலையடையச் செய்துள்ளது.

* 4-வது தொழில் புரட்சி அதாவது ஆறறிவு படைத்த மனிதனால் உருவாக்கப்பட்ட ரோபோக் களின் புழக்கம் இத்துறையின் வளர்ச்சியை பல மடங்கு உயர்த் தும் என்றாலும் அது மனிதர்களை ஓரங்கட்டிவிடும என்று பெரும்பா லான தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்போது நடந்து வரும் மாற்றங்களால் அனைத்து துறைகளிலும் உள்ள மனித உழைப்பு பணிகள்கூட ரோபோக்கள் வசமாகி விடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப புரட்சி என்ற போர்வையில் மனிதர்களுக்கு வேலையிழப்பை, வேலையில்லா திண்டாட்டத்தை ஏற்படுத்தும் ஒரு உலகை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம் என்று பெரும்பாலானோர் தங்களது கவலையை இந்த மாநாட்டில் பதிவு செய்துள்ளனர்.

**70 லட்சம் பேர் வேலையிழப்பு**

இப்போதைய நிலையில் ஆராய்சசிகளும், ரோபோ பயன்பாடும் அதிகரிக்கும்பட்சத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் 70 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு பறிபோகும் என்று புள்ளிவிவர ஆதாரம் பலரையும் கவலையடையச் செய்துள்ளது.

**இராணுவத்தில்**

உற்பத்தித் துறையில் ரோபோக்களை அதிகம் பயன்படுத்துவதற்குப் பதிலாக இராணுவத்தில் பயன்படுத்தினால் மனித உயிரிழப்புகளைத் தடுக்க முடியும் என்ற இங்கிலாந்து பல்கலைகழக பேராசிரியர் ஆனல் வின்ஃபீல்டின் கருத்தையும் மறுப்பதற்கில்லை. இதே போல மைக்ரோசாஃப்ட் தலைமைச் செயல் அதிகாரி சத்யா நாதெள்ளா மற்றும் ஃபேஸ்புக் சிஓஒ ஷெரில் ஷாண்ட்பெர்க் ஆகியோர் ரோ போக்களின் வருகை தொழில் துறை, சமூக முன்னேற்றத்துக்குப் பயன்படும் என்று முன்வைத்த வாதங்களும் இந்த அவையில் இடம்பெறத்தான் செய்தன.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.00 | 146.01 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.13 | 213.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.02 | 164.29 |
| சுவிஸ் பிராங் | 141.92 | 147.86 |
| கனேடிய டொலர் | 102.66 | 106.84 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.10 | 105.86 |
| சிங்கப்பூர் டொலர் | 100.98 | 104.85 |
| ஜப்பான் யென் | 1.20 | 1.25 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ராமராஜ்யா

இந்த சமயத்தில் ராம்ராஜ்யா என்ற இந்திப்படம் வந்தது. ராவணனை வீழ்த்தி விட்டு சீதையை மீட்டுக் கொண்டு ராமர் நாடு திரும்பிய பிறகு நடந்த கதை.

சலவைத் தொழிலாளி ஒருவன், சீதையைப் பற்றியும் ராமரைப் பற்றியும் இழிவாகப் பேச சீதையைக் காட்டுக்கு அனுப்பி விடுகிறார், ராமர். அங்கு லவனும் குசனும் பிறக்கிறார்கள்.

முடிவில் ராமரை லவனும் குசனும் சந்திக்கிறார்கள். அவர் யார் என்று தெரியாமல் போர் தொடுக்கிறார்கள்.

ராமர் சீதையை சந்திக்கிறார். சீதையை அழைத்துக் கொண்டு அரண்டமனைக்குச் செல்ல ராமர் முன்வரும் போது சீதை தன் தாயான பூமா தேவியை பிரார்த்திக்கிறாள். மகள் அனுபவித்த வேதனைகளால் மனம் கலங்கிய பூமாதேவி மகளை தன்னிடம் அழைத்துக் கொள்ளத் தீர்மானிக்கிறார்கள். பூமி பிளக்கிறது. சீதை உள்ளே போய்விடுகிறாள்.

ராமர் கலங்குகிறார். கதை முடிகிறது.

இந்தப் படத்தில் பிரேம் அதீப் ராமராகவும், ஷோபனா சம்ரத் (நடிகை நூடனின் தாயார்) சீதையாகவும் அற்புதமாக நடித்தனர்.

# தமிழ் சினிமா வரலாறு

94

## ஏவி.எம்.மின் வேதாள உலகம்

## லலிதா- பத்மினி நாட்டிய நாடகம்

காந்தி பார்த்த படம்

வாழ்நாளில் சினிமாவையே பார்த்திராத மகாத்மா காந்தி, ராமராஜ்யா வைப் பார்த்துப் பாராட்டினார். காந்தியடிகள் பார்த்த ஒரே சினிமா படம் ராம்ராஜ்யா. இதுதான்.

ராம்ராஜ்யாவின் உரிமை, எவர்கிரீன்ஸ் என்ற நிறுவனத்திடம் இருந்தது. அந்த நிறுவனத்தினரை ஏவி.எம். அணுகினார். தமிழில் டப் செய்ய உரிமையைக் கேட்டார்.



இந்தப் படத்தைப் பல முறை பார்த்தார்., ஏவி.எம். சீதையை பூமி விழுங்கும் கட்டத்தில் கண்ணீர் விட்டு அழுதார். படத்தைப் பார்த்த பெரும்பாலோரின் நிலை

தமிழில் இப்படம் வெற்றியடையும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. நீங்கள் அதை உங்கள் சொந்தப் பொறுப்பில் செலவு செய்து தமிழாக்குவதாக இருந்தால் அதற்கு சம்மதிக்கிறோம் என்று கூறிய அவர்கள், தமிழில் டப் செய்ய என்ன செலவாகிறதோ அது உங்கள் பொறுப்பு. வருகிற வருவாயை இரண்டு பங்காகப் போட்டு ஒரு பங்கை எங்களுக்குத் தந்துவிட வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குத் தான் இந்த உரிமை என்றார்கள்.

அதற்கு ஏவி.எம்.சம்மதித்து உரிமையைப் பெற்றார்.

ராமர் பட்டாபிஷேக காட்சியுடன் படம் தொடங்குகிறது. அதற்கு முன் ராமர் சீதை திருமணம், அவர்கள் காட்டுக்கு செல்வது சீதையை ராவணன் கடத்திச் செல்வது, இலங்கையில் ராமர் போர் புரிவது போன்ற காட்சிகளை நிழல் காட்சிகளாக எடுத்தார். ராமாயணத்தை விளக்கும் எனக்கு உன் இருபதம் நினைக்க அருள் தருவாய் என்ற பாடலை டி.கே.பட்டம்மாளைக் கொண்டு பாடச் செய்து, அதை டைட்டில் பாடலாகச் சேர்த்தார்.

இந்த 6 நிமிடப் பாடலும் அதற்கு இணையாக நிழல் காட்சிகளும் சேர்ந்து ராமாயணத்தின் முன் பகுதியை சுருக்கமாக விளக்கியது.

இந்தப் படத்தில் மற்றொரு விசேஷம். டப்பிங் படம் என்று தெரியாத அளவுக்கு உதட்டசைப்புக்குத் தக்கபடி சிறப்பாக வசனம் எழுதியிருந்தார், தேவநாராயணன்.

தமிழ் ராமராஜ்யம் திரையிடப்பட்டு சக்கை போடு போட்டது. மலையாளத்திலும் டப் செய்யப்பட்டு அதற்கு முன் கேரளத்தில் எந்தப் படமும் கண்டிராத வெற்றியைப் பெற்றது.

வேதாள உலகம்

அடுத்து, வேதாள உலகம் என்ற படத்தை ஏவி.எம். தயாரித்தார். இது நாஜா- ராணி கதை. மகாலிங்கம் கதாநாயகனாகவும் யோக மங்களம் சகோதரிகளில் ஒருவரான மங்களம் கதாநாயகியாகவும் நடித்தனர்.

(தொடரும்)

---

(18 ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி....)

முன்னைய ஆட்சிகளின்போது சட்டமானது ஆட்சியாளர்களது விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே கையாளப்பட்டுவந்தது. இப்போது இந்த அரசாங்கமோவென்றால் தாம் இதில் தலையிடவில்லை என்று கூறுகின்ற போதிலும் மறைமுகமாகவும் நுட்பமாகவும் அவர்கள் செய்ததையே இவர்களும் செய்கிறார்கள். இதுவே இந்த முழு ஒழுங்கமைப்பிலுமுள்ள பெரும் தவறாகும்'' என்பதே அவரது கூற்றாக இருக்கிறது.

குறித்த எம்பிலிப்பிட்டிய சம்பவம் மட்டில் வடமாகாண சபை பொலிசாரிடமிருந்து அறிக்கையொன்றினை நேரடியாகவே கோரியிருந்தது. பிரேமரட்ணவைப்பொறுத்த மட்டில் இது முற்றிலும் மோசமானதொரு நிர்வாக நிலைமையேயாகும்.

“நீதிமன்றங்களில் விசாரணைக்கு வரும் இந்தவிதமான எந்தவொரு வழக்கிலும் சாட்சியமளிக்கும்படி பொலிஸார் அழைக்கப்படுவதுபோல் சற்றே கற்பனை செய்து பாருங்கள். தங்கள் மேலதிகாரிகளுக்கெதிராக விடயங்களை ஆதாரத்துடன் தெளிவுபடுத்தி சாட்சி கூறுவார்கள் என்றா நினைக்கிறீர்கள்? குறித்த மேற்படி சம்பவத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டுள்ள ‘ASP’ அவர்களது மேலதிகாரி என்பதால் அவருக்கெதிராக ஆதாரங்களை முன்வைத்து சரியானபடி சாட்சியமளிப்பதோ- அறிக்கையொன்றைப் பெற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதும் நடைமுறைச் சாத்தியமானது மான காரியமாக இருக்குமா? அன்று நடந்த சம்பவத்திற்கு கண்ணால் கண்ட நேரடி சாட்சியங்கள் இருப்பதால் அறிக்கையொன்று தேவைதானா? ஆனாலும் சாட்சியமளிப்பதன் மூலம் விளையக்கூடிய ஆபத்தான விளைவுகளுக்குப் பயந்த மக்கள் அதற்கு முன்வருவது கடினம்.

இவ்விடயத்தில் வடமாகாண சபையின் பங்குகூட மக்களை ஏமாற்றும் வெறும் போலி முயற்சியே தவிர வேறல்ல. அவர்களுங்கூட பொலிசாரின் இந்த அட்டூழியங்களை மூடிமறைக்கவே செய்வர்'' என அவர் மேலும் கூறினார். அதேநேரம், எம்பிலிப்பிட்டிய சம்பவம் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி கலந்தாலோசித்து அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி தீர்மானிப்பதற்கான பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தேசிய பொலிஸ் ஆணையகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் பற்றிய விடயம் இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து 21 பொலிஸ் அதிகாரிகள் எம்பிலிப்பிட்டியாவுக்கு வெளியே வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டதுடன் அவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்படவுமுள்ளது. இந்த சம்பவமானது, ஜனவரி 4 ஆம் திகதியன்று எம்பிலிப்பிட்டியாவில் இடம்பெற்ற விழாவொன்றின்போது பொதுமக்கள் குழுவொன்றுக்கும் பொலிசாருக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவு சம்பந்தமான ஒன்றேயாகும். எம்பிலிப்பிட்டியாவின் மேல்மாடியொன்றின் உயரமான மேல் தட்டில் நிகழ்ந்த விருந்துபசாரமொன்றின்போது மாடியிலிருந்து வெளியே தரையில் விழுந்த 29 வயது இளைஞரான சுமித் பிரசன்னா ஜயவர்த்தனவின் குறிப்பிட்ட அந்த அகால மரணத்திற்கு வழிகோலியதே அங்கு ஏற்பட்ட சச்சரவுதான் என்பதே பொலிசாரின் அதுபற்றிய கூற்றாகும். இடம்பெறக்கூடிய அநியாயங்களுக்கெதிராக நீதியை நிலைநிறுத்துவதன்மூலம் சட்டம்- ஒழுங்கை பேணிப்பாது காப்பதற்குப் பதிலாக மாறாகச் செயற்படும் பொலிஸ் அதிகாரிகளையே பாதுகாப்பதற்காக சட்டத்தில் காணப்படக்கூடிய ஓட்டைகளை அல்லது சட்டத்தறகுப் புறம்பான வழிவகைகளையோ பயன்படுத்த முயற்சிக்கும் பொலிஸ் உயரதிகாரிகளையே நாடு கண்டிருந்த நிலைமை போதும் என்றாகிற்று.

மேற்படி பொலிஸ் விவகாரம் பற்றிய வடமாகாண சபையின் நிலைப்பாடு பற்றி அறிவதற்காக பொலிஸ் பேச்சாளர் றுவான் குணசேகரவை சண்டே லீடர் பத்திரிகை தொடர்பு கொண்ட போது பொலிஸார் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்க நெறி- ஒழுங்குமுறை சம்பந்தமான நடவடிக்கைகளுக்கெல்லாம் மாகாண சபைக்கு உச்ச அதிகாரங்கள் இருப்பதாக அவர் கூறியிருந்தார்.

“எனவே வடமாகாண சபை ஏதாவது விடய சம்பந்தமான அறிக்கையொன்றினை பொலிஸ் மா அதிபரிடம் கோருமானால் முழுமையான அறிக்கையொன்றினை அவர் சமர்ப்பிப்பார். பொலிஸாருக்கெதிராக ‘NPC’ க்கு முறைப்பாடு செய்வதற்கான பூரண உரிமையும் பொதுமக்களுக்கு இருக்கிறதென்பதுடன் அதனை நாமும் மதிக்கிறோம். அத்துடன் சரியானதொரு விசாரணையே முறைப்படி மேற்கொள்ளாமல் பொலிசாருக்கெதிரான எந்தவொரு நடவடிக்கையையும் ‘NPC’யும் மேற்கொள்ளாது. பொலிஸ் இலாகாவுங்கூட இப்படியான விசாரணைகளில் ‘NPC’ க்கு உதவுவதற்கோ ஆதரவாக செயற் படுவதற்கோ எப்போதும் தயாராகவே உள்ளது'' என மேலும் கூறிய அவர் ஏற்கனவே கூறப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களாக காணப்படும் பொலிஸ் அதிகாரிகள் உண்மையில் குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டால் பொலிஸ் இலாகா அவர்கள் மீது கண்டிப்பாகவே கடுமையான நடவடிக்கை எடுக்குமென்றும் கூறினார்.

(முற்றும்)

தமிழில் யோகர்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே, உடம்பை
வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!
-திருமந்திரம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# 15,000 பேர் வாக்களிக்க முடியாமல் சிறைச்சாலைகளில் அடைபட்டுள்ளனர்

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் 15 ஆயிரம் பேர் வாக்களிக்க முடியாமல் சிறைகளில் அடைபட்டு இருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசபிரிய தெரிவித்துள்ளார். தேரதல் சவால்கள் மற்றும் மாற்றங்கள் குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.முகாமைத்துவ பேரவை (யுரோவில்) மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தேர்தல் காலங்களில் பல சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. அநத சவால்களின்மத்தியில்பல தேர்தல்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து வெளிநாடுகளிற்கு வேலைவாய்ப்பினை தேடிச்சென்றவர்கள் மற்றும் புலம்பெயர் மக்கள் என 2.5 மில்லியன் வாக்களிக்க தகுதியுடைய மக்கள் வாக்களிக்க முடியாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். வாக்காளர் படிவங்களை உரிய காலத்தில் பூரணப்படுத்தி தேர்தல் திணைக்களத்தில் சமர்ப்பிக்க தவறின் அந்த பதிவுகள், இணைக்கப்படாமல் தவறவிடப்படின், அடுத்த தேர்தலுக்கு வாக்களிக்க முடியாது என்பதனையும் சுட்டிக் காட்டினார்.

பல்வேறு குற்றங்களை புரிந்த நிலையில் 15 ஆயிரம் பேர் சிறைகளில் உள்ளனர். இவர்கள் அனைவரும் நாட்டில் நடைபெறும் எந்த தேர்தல்களிலும் வாக்களிக்காமல் சிறைகளிலே அடைபட்டுள்ளனர். இவர்களை எதிர் காலங்களில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்க செய்வதற்கான ஏற்பாடுகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம் என தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், இந்தவகையில், தேர்தல் சவால்கள் மற்றும் மாற்றங்கள் குறித்து பல கருத்துக்களையும் முன்வைத்தார். இந்த கலந்துரையாடல் பல்கலைக்கழக விரிவுரையாளர கூல் தலைமையில் இடம் பெற்றது. அந்த கலந்துரையாடலில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வ.கே.சிவஞானம் மற்றும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அகிலன், கொழும்பு நகர உதவித் தேர்தல் ஆணையாளர் அச்சுதன் மற்றும் அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-4)

# விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை தேவை

பாடசாலையில் நடந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியபோது மயக்கமுற்ற மாணவி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்தார் என்று செய்தி பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இதுபோன்ற ஒரு சில சம்பவங்கள் முன்பும் நடந்ததான தகவல்கள் உள்ளன. பாடசாலைகளில் நடைபெற்று வரும் மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றுகின்ற மாணவர்கள் மயக்கமுற்று விழுகின்ற சம்பவங்கள் நடப்பதுண்டு. எனினும் மயக்கமுற்ற ஒரு மாணவி மரணம் அடைந்தார் என்பது வேதனைக்குரியது.

பொதுவில் எங்கள் பகுதிகளில் மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றுகின்ற வீர வீராங்கனைகளை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துகின்ற வழமை இருக்கிறதே தவிர, இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றுகின்ற மாணவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துகின்ற நடைமுறை இல்லை.

எனினும் கொழும்பு போன்ற முக்கிய நகரங்களில் உள்ள பிரபீல்யமான பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவர்களை முழுமையாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவச் சான்றிதழைப் பெற்றபின்னரே மாணவர்களை குறித்த போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கின்றன.

இத்தகைய நடைமுறை இங்கும் தேவை என்பது உணரப்பட வேண்டும். மெய்வல்லுநர் போட்டிக்கு முன்னதாக மாணவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை அறிந்து கொள்வதுடன், உடல் நலக்குறைவு அல்லது பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டால், உரிய சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதன் மூலம் உயிர்ப்பாதுகாப்பு ஏற்படுவதுடன் மாணவர்கள் கல்விச் செயற்பாட்டிலும் விளையாட்டுத் துறையிலும் ஈடுபடக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

எனவே, இது தொடர்பில் சுகாதாரத் திணைக்களமும் கல்வித் திணைக்களமும் இணைந்து பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இதற்கு அப்பால் வருடம் தோறும் பாடசாலைகளில் மருத்துவப் பரிசோதனை இடம்பெறுகின்ற நடைமுறை உண்டு.

இந்த நடைமுறையில் மாணவர்கள் தமது பாடசாலைக்காலத்தில் குறைந்தது மூன்று தடவைகள் பரிசோதனைக்கு உட்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

எனினும் பாடசாலை மருத்துவ பரிசோதனை என்ற விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பிடமும் ஓர் அசமந்தப் போக்கு இருப்பதைக் காண முடிகிறது.

பாடசாலை மருத்துவப் பரிசோதனை என்பது ஏதோ வருடாந்தம் செய்யப்படுகின்ற ஒரு சம்பிரதாய சடங்கு போலவும் அதை செய்து முடித்து விட்டால் எல்லாம் சரி என்பதாகவுமே குறித்த நிகழ்ச்சியத் திட்டம் இருப்பதைக் காணமுடிகிறது.

எனவே இத்தகைய நிலைமைகளை மாற்றி பாடசாலை மருத்துவ பரிசோதனையை வினைத்திறன் உடையதாக மாற்றுவதுடன் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் தொடர்பில் மருத்துவ பரிசோதனை செய்கின்ற ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் அமுலாகும்போது மயக்கமுற்ற மாணவி மரணம் என்பது போன்ற துன்பகரமான சம்பவங்கள் முழுமையாகத் தடுக்கப்படும் என்பதால் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# வேலைவாய்ப்பைக் கோரி 12,900 பேர் விண்ணப்பம்

## யாழில் ஒரு மாத காலப்பகுதிக்குள்

யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தில் 12 ஆயிரத்து 900 விண்ணப்பப் படிவங்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்.மாவடடததில் உள்ள 15 பிரதேச செயலாபிரிவுகளினூடாகவும் வேலைவாய்ப்புத் தேடுவோரின விபரங்கள் கோரப்பட்டிருந்தன. அந்த வகையில்தற்போது 12 ஆயிரத்து 900 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவர்களுக்கு இந்த வருடம் தனியார் துறைகளில் அவர்களின் தகுதிகளின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கள் வழங்கபபடவுள்ளன. மேலும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமானது ஒரு வலையமைப்பாக இயங்கவுள்ளதால் தொடர்ச்சியாக வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடம் இத்திணைககளத்தின் ஊடாக 600 பேருக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலைவாயப்பு தேவைகள் இத்திணைக்களத்தினூடாகவும் செயறபடுத்தப்படவுள்ளது. (இ-9)

# மகிந்த, ஷிரந்தி இருவரையும் கைது செய்ய விடமாட்டேன்

## ரணில் தெரிவிப்பு

எவ்வகையான மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருநதாலும் மகிந்த ராஜபக்ஷ, ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோரை கைது செய்ய இடமளிக்கப்போவதில்லை என்று பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 68ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் பின்னர் ஐ.தே.க. முக்கியஸ்தர்களுக்கு அலரி மாளிகையில் தேநீர் விருந்தொன்று நடைபெற்றுள்ளது.

இதன்போது யோஷித ராஜபக்ஷவின் கைது தொடர்பாக ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் பிரதமரிடம் வினவியுள்ளனர். இதற்கு முன்னரே அவர கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்தாக இருந்துள்ளது.

எனினும் அதனை மறுத்துள்ள பிரதமர், ராஜபக்ஷவினர் தொடர்பில் உறுதியான ஆதாரங்கள் இன்றி அவர்களை கைது செய்யமுடியாது.

அதிலும் என்னதான் ஆதாரங்கள் இருந்தாலும், மோசடிகள் செய்திருந்தாலும் மகிந்தவையோ, ஷிரந்தியையோ கைது செய்ய இடமளிக்கப்போவதில்லை. அவர கள் மீது உள்ள மரியாதையின் காரணமாக அதற்கு நான் இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். (இ)

# தொண்டையில் வாழைப்பழம் சிக்கி 18மாத பெண் குழந்தை உயிரிழப்பு

18 மாத பெண் குழந்தையின் தொண்டையில் வாழைப்பழம் சிக்கியதால் குழந்தை மூச்சுத்திணறி உயிரிழந்த சம்பவம் ஒன்று அலவத்தேகம என்ற கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

கலகெதர பொலிஸ் பிரதேசத்தைச்சேர்ந்த இக்கிராமத்தில் வீடொன்றில் பெற்றோர் வாழைப்பழம் ஒன்றின் பகுதியை 18 மாத பெண் குழந்தையின் கையில் கொடுத்துள்ளனர்.

இக்குழந்தை அதனை வாயில் போட்டு விழுங்கிய போது அது தொண்டையில் சிக்கி மூச்சுத்திணறச் செய்துள்ளது. இதனால் குழந்தை வேதனையால துடிக்கவேபெற்றோர்குழந்தையை உடனடியாக மெதவல வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற போது குழந்தை அங்கு உயிரிழந்து காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

இக்குழந்தையின் திடீர் மரணம் தொடர்பான மரண விசாரணையை தும்பனை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வை.ஜீவதாஸ் நடத்தினார். சாட்சியங்களையும் வைத்திய பரிசோதனை அறிக்கையையும பதிவு செய்து கொண்ட பின் வாழைப்பழத்துண்டு குழந்தையின் தொண்டையில் சிக்கியதால் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளது என தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (இ)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 09.02.2016 செவ்வாய் யாழ்.பிரதேசத்தில் இணுவில் கந்தசாமி கோவில் பிரதேசம் ஆகிய இடத்திலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம், தீவீரகம (பெரிய உளுக்குளம்) ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைவனின் நிழல்



மனத்தின் இயக்க நிலைகளை இப்போது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம். ஜீவகாந்தமானது உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களின் விரைவான சுழற்சியினால் எழும் அலைகளே. ஒரு உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களிலிருந்து இவ்வாறு வெளியாகும் அலைகள் அனைத்தும் உடலில் சுழன்று கொண்டே இருக்கின்றன.

பொதுவாக, எந்த ஆற்றல் சுழற்சி பெற்றாலும் திண்மை உடைய பகுதி மத்தியில் போய்ச் சேர்வதும், லேசான பகுதி புறத்தே நிற்பதும் துல்லியச் சமதளச் சீர்மை (Specific Gravity) தத்துவம் ஆகும். இந்த இயல்பின்படி, ஜீவகாந்தத்தின் பெரும்பகுதி தனது சுழலியக்கத்தினால் உடலின் மையப் பகுதிக்கு வந்து சேருகிறது. அங்கு இறுகி, குறுகி அழுத்தம் பெற்று ஜீவகாந்த நிலைக்களமாக அமைகிறது. இதனைக் கருமையம். என்றும், ஆன்மா என்றும் வழங்குகிறோம்.

மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக் கொண்டிருக்கும், ஏற்படும் தாக்கங்கள் அனைத்தும் கருமையத்தில் போய்ச் சேருகின்றன. இந்த நிகழ்ச்சியை வினைப்பதிவு என்று கூறுகிறோம். பதிவு என்றால் இங்கு எழுதி விளக்கக் கூடியதோ, அல்லது புலன்களுக்கு எட்டும்படியாக அடையாளம் கொடுக்கக் கூடியதோ அன்று.

கருமையத்தில் இறுகிக் குறுகி, நிலை பெற்றிருக்கும் ஜீவகாந்த அழுத்தம் ஒவ்வொரு செயல் அல்லது அனுபோக அனுபவங்களுக்கும் ஏற்ப, தரமாற்றம் பெற்றுக் கொண்டே இருக்கிறது. அப்படி மாற்றம் பெற்ற தன்மைகள் அதே மன அலைச் சுழல் மறுபடியும் வரும்போது, மூளையின் காந்த அலைகளால் விரித்துக் காட்டப்படுகிறது. அப்பொழுது உண்டாகும் அகக்காட்சியே எண்ணங்கள்.

இறைநிலைக்கும் மன நிலைக்கும் உள்ள தொடர்பை உணர வேண்டும் என்றால், அவற்றை உருவத்துக்கும், அதிலிருந்து தோன்றும் நிழலுக்கும் ஒப்பிடலாம். உருவத்தை விட்டு நிழல் பிரிவதே இல்லை. ஆனால், நிழலை எடுத்துக்காட்டவல்ல ஒளியானது உருவத்தின் மீது படும் கோணத்திற்கு ஏற்ப, நிழலானது அளவில் மாறுபடும். அது போன்று மனிதமனம் இறைநிலையை விடுத்து இயங்குவதே இல்லை.

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III 2016

# திருநெல்வேலி YMHAவை வென்றது யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணி



ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான தகுதி காண் போட்டிகள் மூலம் யாழ்.நகரில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான முதலாவது போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி திருநெல்வேலி YMHA அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சி நிகழ்வில் வெற்றி பெற்ற திருநெல்வேலி YMHA அணி 46 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 211 ஓட்டங்களை பெற்றது.

அம்ருஜன் 32, சந்துரு-15, ஜெயராஜ்-29, விஜியாளன்-15, கீரன்-12, சுதா ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களை பெற்றனர். அகிலன் -01, பிருந்தா-02, கஜீபன்-03, லோகதீசன்-02, லவேந்திரா-02 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 29.5 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 215 ஓட்டங்களை பெற்றது. கரிபிரவீன்-55, அகிலன்-17, கஜீபன்-59, காண்டீபன் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

நிமல்சன் -04, சுதா-01, நிஸாந்தன்-02 இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் தரவரிசை பட்டியலுக்கு யாழ்.ஜொனியன்ஸ் அணி 8.35 புள்ளிகளையும் திருநெல்வேலி YMHA அணி 2.91 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (கு)





வள்ளுவர்புரம் விசுவமடு மு/பாரதிவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள் கங்கை, ஜமுனை, காவேரி என மூன்று இல்லங்களாக பிரிக்கப்பட்டு மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் மாணவர்கள் கங்கை இல்லம் முதலாம் இடத்தையும் காவேரி இல்லம் இரண்டாம் இடத்தையும் ஜமுனை மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. (கு-295)

INDIAN PREMIER LEAGUE® 2016

# ஐ.பி.எல். ஏலம்; முழு விபரங்கள் அடங்கிய பட்டியல்



ஐ.பி.எல். கிரிக்கெட் வீரர்கள் ஏலம் நேற்றுடன் நிறைவடைந்து விட்டது.

ஐபிஎல் அணிகள் மற்றும் அதன் வீரர்கள் விவரம் வருமாறு,

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்

விராட் கோலி, கிறிஸ் கெயில், ஷேன் வாட்சன், ஏ.பி.டிவில்லியர்ஸ், மிட்செல் ஸ்டார்க், டேவிட்வீஸ், எஸ்.அரவிந்த், கேன் ரிச்சர் ட்சன், ஸ்டுவர்ட் பின்னி, வருண் ஆரோன், கேதர் ஜாதவ், மந்தீப் சிங், ஆடம் மில்ன, சர்பராஸ் கான், சாமுயெல் பத்ரீ, டிராவிஸ் ஹெட், ஹர்ஷல் படேல், பிரவீண் துபே, அபு நெகிம், விக்ரம்ஜித் மாலிக், யஜுவேந்திர சாஹல், இக்பால் அப்துல்லா, அக்ஷய் கர்னேவர், விகாஸ் டோகாஸ், சச்சின் பேபி.

ரைசிங் புனே சுப்பர் ஜெயண்ட்ஸ்

டோனி, அஜிக்கிய ரஹானே, ரவிச்சந்திரன் அஸ்வின், ஸ்டீவன் ஸ்மித், மிட்செல் மார்ஷ், எம்.அஸ்வின், ஃபா டு பிளேசிஸ், இசாந்த் சர்மா, கெவின் பீட்டர்சன், இர்பான் பதான், திசர பெரேரா, ரஜத் பாட்டியா, அசோக் டிண்டா, ஸ்காட் போலண்ட், ஆடம் ஸம்ப்பா, பீட்டர் ஹேண்ட்ஸ்கோம்ப் (ஆஸி. வி.கீ), ஆர்.பி.சிங், ஈஷ்வர் பாண்டே, அன்கிட் சர்மா, அங்குஷ் பெய்ன்ஸ், ஜஸ்கரன் சிங், பாபா அபரா ஜித், தீபக் சாஹர்.

குஜராத் லயன்ஸ்

சுரேஷ் ரெய்னா (அணித்தலைவர்), ஏரோன் பிஞ்ச், ரவீந்திர ஜடேஜா, பிரெண்டன் மெக்கல்லம், ஜேம்ஸ் பாக்னர், டிவைன் பிராவோ, பிரவீண் குமார், டிவைன் ஸ்மித், டேல் ஸ்டெய்ன், தினேஷ் கார்த்திக், தவால் குல்கர்னி, ஏகலவ்யா திவேதி, ஆண்ட்ரூ டை, இஷான் கிஷன், ஷதாப் ஜகதி, பிரவீண் டாம்பே, ஜெய்தேவ் ஷா, பிரதீப் சங்வான், அக்ஷ்தீப் நாத், பராஸ் தோக்ரா, உமங் ஷர்மா, அமிட் மிஸ்ரா, ஷிவில் கவுஷிக், சரப்ஜித் லட்டா.

சன் ரைசர்ஸ் ஹைதராபாத்

ஷிகர் தவண், யுவராஜ் சிங், ஆஷிஷ் நெஹ்ரா, டேவிட் வார்னர், புவனேஷ் குமார், தீபக் ஹூடா, டிரெண்ட் போல்ட், கரண் சர்மா, இயான் மோர்கன், முஸ்தபிசுர் ரஹ்மான், பரீந்தர் ஷரண், ஆதித்யா தாரே, மோய்சஸ் ஹெண்ட்ரிக்ஸ், கே.எல். ராகுல், பர்வேஸ் ரசூல், கேன் வில்லியம்சன், பென் கட்டிங், நமன் ஓஜா, விஜய் ஷங்கர், அபிமன்யு மிதுன், ஆஷித் ரெட்டி, டி.சுமன், பிபுல் ஷர்மா, ரிக்கி புயி, சித்தார்த் கவுல்.

மும்பை இந்தியன்ஸ்

லஷித் மலிங்க, கெய்ரன் பொலார்ட், ஹர்பஜன் சிங், கோரி ஆண்டர்சன், அம்பாத்தி ராயுடு, ஜோஸ் பட்லர், நாது சிங், வினய் குமார், டிம் சவுத்தி, க்ருணல் பாண்டியா, பார்த்திவ் படேல், கிஷோர் காமத், ஜஸ்பிரித் பும்ரா, ரோஹித் சர்மா, லெண்டில் சிம்மன்ஸ், உன்முக்த் சந்த், மெக்லினாகன், மெர்சண்ட் டி லாங்கே, ஷ்ரேயஸ் கோபால், சித்தேஷ் லாத், அக்ஷய் வகாரே, நிதிஷ் ரானா, ஹர்திக் பாண்டியா, ஜே.சுசித், ஜிதேஷ் சர்மா, தீபக் புனியா.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

கவுதம் கம்பீர், சுனில் நரைன், ராபின் உத்தப்பா, பியூஷ் சாவ்லா, யூசுப் பதான், மோர்னி மோர்கெல், ஷாகிப் அல் ஹசன், உமேஷ் யாதவ், மணீஷ் பாண்டே, ஜெய்தேவ் உனட்கட், அன்கிட் ராஜ்புத், கிறிஸ் லைன், ஜான் ஹேஸ்டிங்ஸ், ஜேசன் ஹோல்டர், சூரியகுமார் யாதவ், ஆந்த்ரே ரசல், பிராட் ஹாக், குல்தீப் யாதவ், கொலின் மன்ரோ, ஆர்.சதீஷ், ஷெல்டன் ஜாக்சன், மனன் சர்மா.

கிங்ஸ் லெவன் பஞ்சாப்

டேவிட் மில்லர், மிட்செல்ஜான்சன், மோஹித் சர்மா, கிளென் மக்ஸ்வெல், மனன் வோரா, முரளி விஜய், ரிஷி தவண், விருத்திமான் சஹா, ஷான் மார்ஷ், கைல் அபாட், குர்கீரத் சிங் மான், சந்தீப் சர்மா, கே.சி. கரியப்பா, அக்சர் படேல், மார்கஸ் ஸ்டாய்னிஸ், நிகில் நாயக், ஃபர்ஹான் பெஹார்டீன், அனுரீத் சிங், ஷரத்துல் தாக்கூர், பிரதீப் சாஹு, ஸ்வப்னில் சிங், அர்மான் ஜாஃபர்.


டெல்லி டேர் டெவில்ஸ்

பவன் நேகி, கிறிஸ் மோரிஸ், நேதன் கூல்ட்டர்-ந்நைல், மொகமது ஷமி, கார்லோஸ் பிராத்வெய்ட், சஞ்சு சாம்சன், கருண் நாயர், ஜாகீர் கான், அமித் மிஸ்ரா, குவிண்டன் டி காக், ஸ்ரேயஸ் ஐயர், ஜே.பி.டுமினி, ரிஷப் பண்ட், மயங்க் அகர்வால், இம்ரான் தாஹிர், ஷாபாஸ் நதீம், சவுரவ் திவாரி, ஜோயெல் பாரிஸ், ஆல்பி மோர்கெல், சாம் பைலிங்ஸ், ஜெயந்த் யாதவ், பவன் சுயால், சாமா மிலிந்த், பிரத்யூஷ் சிங், மாஹிபால் லோர்மர், அகில் ஹெர்வாட்கர், கலீல் அகமது. (கு)



மானிப்பாய் இந்துக்கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி அண்மையில் கல்லூரி அதிபர் எம்.இரதினபாலா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வினை E.S.P நாகரத்தினம் கொடி அசைத்து ஆரம்பித்து வைப்பதனை படத்தில் காணலாம்.

# சிறையிலுள்ள யோஷிதவிடம் கைத்தொலைபேசி கண்டுபிடிப்பு!



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ வெலிக்கடச் சிறைச்சாலையில் கைத்தொலைபேசியுடன் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிஎஸ்என் தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்ட லெப். யோஷித ராஜபக்ஷ தற்போது வெலிக்கடச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரைப் பார்வையிடச் சென்ற தனது தந்தையார் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து விட்டு சிறைக்கூண்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, யோசித ராஜபக்ஷவின் சட்டைப்பையில் இருந்த கைத்தொலைபேசி கீழே விழுந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மூத்த அதிகாரி, இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படால், வாக்குமூலம் அளிக்க இரண்டு அதிகாரிகள் தயாராக இருப்பதாக சிறைச்சாலையில் உள்ள புலனாய்வு அதிகாரிகளை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-12)

# போர்க்குற்றங்கள் தொடர்பிலான உள். நீதிமன்றக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளும் வீரவன்ஸ

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு நீதிமன்ற கட்டமைப்பை ஏற்றுக் கொள்வதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட அல ஹுசைனின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் விமல் வீரவன்ச மேற்குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுவரை காலமும் போர்க்குற்றங்கள் நடைபெறவில்லை என்றும் , அது தொடர்பான எந்தவொரு விசாரணையும் தேவையில்லை என்றும் வலியுறுத்தி வந்த விமல் வீரவன்ஷவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதையே மேற்குறித்த கருத்து வெளிப்படுத்தியுள்ளது.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள விமல் வீரவன்ச,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் பிரிவினைவாத சக்திகளின் தூண்டுதலுக்கு ஏற்ப நடந்து கொள்வதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அதற்கு ஏதுவாகவே வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் கட்டமை ப்பை அவர் வலியுறுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைக் கட்டமைப்பு மூலமாக மட்டுமே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார். (செ-12)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதியமைச்சர்கள் புதிய கூட்டணி

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தினுள் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதியமைச்சர்கள் ஒன்றிணைந்து புதிய கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளனர்.


சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதியமைச்சர்களுக்கு அமைச்சின் செயற்பாடுகளில் உரிய அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கவும், அவர்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியின் மத்தியஸ்தத்துடன் தீர்த்துக் கொள்ளவும் இக்கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கூட்டணிக்கு முன்னாள் பிரதமர் டீ.எம். ஜயரத்னவின் மகனும், மகாவலி அபிவிருத்தி பிரதியமைச்சருமான அனுராத ஜயரத்ன தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் இக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் பிரதியமைச்சர்கள் கிராமிய மட்டத்தில் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு கூடுதல் வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால, பிரதியமைச்சர்க ள் கூட்டணியின் பின்னால் நின்று செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் என குறிப்பிடப்படுகிறது. (செ-12)

# மதிலுடன் மோதியது கார்

## பெண்கள் இருவர் படுகாயம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் நேற்று மாலை 2.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இரு பெண்கள் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புத்தூர் பிரதேச சபைக்கு முன்னால் பய ணித்துக் கொண்டிருந்த கார், வேகக்கட் டுப்பாட்டை இழந்து பிரதேச சபையின் மதில் மீது மோதியுள்ளது. இதன்போது, காரில் பய ணித்த இரு பெண்களும் படுகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-12)

# பேரவையின்...

த.வசந்தராஜா தலைமையில் நடந்த இந்நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் முன்னிலையில் தீர்வுத்திட்டத்தை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கிழக்கிலங்கை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.பிறேமகுமார் வரவேற்புரையை நிகழ்த்த,

சிவஸ்ரீ ஸ்ரீநித்தியானந்த பகீரத சர்மா, மட்டக்களப்பு-அம்பாறை மறை மாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை மற்றும் சைவப்பெரியார் சிவப்பிரகாசம் ஆகியோர் ஆசி உரை வழங்கினர்.

தீர்வுத்திட்ட வரைபின் விளக்கத்தை சட்டத்தரணி விஜயகுமார் வழங்கினார். தொடர்ந்து தீர்வுத்திட்ட வரைபை தயாரித்த நிபுணர் குழுவுடன் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது. (ந)

# வழக்குகளை...

யாழுக்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் ஹுசைன் மற்றும் அவரது குழுவினர்கள் வடமாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் நேற்றைய தினம் காலை சந்தித்து கலந்துரையாடினார்கள். அந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எந்தவகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை அறிந்து கொள்வதற்காகவும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை அறிந்து கொள்வதற்காகவும், யாழில் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்ள வருகை தந்துள்ளதுடன் சிறைச்சாலைகளில் இருக்கும் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் போனவர்கள், காணிகளை பறிகொடுத்தவர்கள் சம்பந்தமாகவும், பாதிக்கப்பட்ட மக்களுடன் பேசுவதற்காக வருகை தந்திருந்தார்.

அதே நேரம், ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் ஒரு மணித்தியாலயத்திற்கு மேல் நேரத்தினை செலவிட முடியாமைக்கு தனது வருத்தத்தினையும் தெரிவித்துள்ளார். எனினும் நாம் தமிழ் மக்களின் பலவித பிரச்சினைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருக்கு எடுத்துக் கூறினோம்.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினால் நிறைவேற்ற ப்பட்ட தீர்மானம் தமிழ் மக்களுக்கு சாதகமாக அமைந்திருந்தது அனைவரும் அறிந்த விடயம். இந்த விடயங்கள் அனைத்தினையும் அவர் பகிர்ந்து கொண்டார். அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்த கோரிக்கையை சர்வதேச கொள்கைகள் சரி என ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், சிரியாவில் உள்ளவர்களுக்கு பொது மன்னிப்பு கொடுப்பது தவறு என்று தான் கூறியதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

பொது மன்னிப்பிலும் விட குறித்த வழக்கு நடவடிக்கைகளை மிக விரைவில் நிறைவு செய்து விடுதலை செய்வதே சிறந்தது என அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின்வருகையினையும், தமது பொதுமன்னிப்பு விடயத்தினையும் ஒரு எதிர்பார்ப்பாக அரசியல் கைதிகள் காத்திருந்தார்கள். அந்த விடயத்தினை நான் நன்கு அறிவேன். அந்த எதிர்பார்ப்பினை ஆணையாளர் ஆழமாக தொட்டுச் செல்லவில்லை

இந்நிலையில் மேற்படி விடயத்தினை அரசியல் கைதிகளுக்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது. அவ்வாறான நிலைப்பாட்டில் ஐ.நா ஆணையாளர் இருந்தால், அரசியல் கைதிகளின் வழக்கினை விரைவில் நடத்தி முடிப்பதற்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளேன். அந்த விடயத்தில் அவர் கண்ணும் கருத்துமாக இருப்பார் என நம்புகின்றேன்.

அந்த விடயங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இன்றைய காலகட்டத்தில் பல விதமான பிரச்சினைகள் இருந்தாலும், வடக்கும் தெற்கும் இணைந்து, நடவடிக்கைகளை எடுத்து இந்த பிரச்சினைகளுக்கு அப்பால் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலனைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட மக்களின் நலன்தான் முக்கியமென்றும், வலியுறுத்தினார் என முதலமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில், வடமாகாண விவசாயம் மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் மற்றும் மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் உட்பட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் உடனிருந்தனர். (செ-4,9)

# அமைச்சர் ஜயரத்னவுக்கு ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன பாரிய மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நாளை 9ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இவர் சிவில் மற்றும் விமான சேவைகள் அமைச்சராக கடமையாற்றியிருந்தார்.

அக் காலப் பகுதியில் ஸ்ரீலங்கன் கென்டரின் நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கா விமான நிறுவனம் ஆகியவற்றில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (செ-12)

# அபிராமிப்பட்டர் விழா

(சித்தன்கேணி)

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் அபிராமிப்பட்டர் விழாவும் மஹோதய தீர்த்த நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ சுந்தரராங்கநாத குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவானது அம்பாள் தேவஸ்தானத்தில் கொண்டாடப்படும் 144ஆவது வருட விழா என்பது சிறப்பம்சமாகும். (செ-17)

# வாகன விபத்தில் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் கச்சேரி நல்லூர் வீதியில் இடம்பெற்றுள்ளது.

நல்லூர் பகுதியைச் சேர்ந்த வருண் சஞ்சீவன் (வயது-22) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12, 30)

# முகாம்களிலுள்ள மக்கள் அனை...



பெயர் மக்களைசந்தித்து கலந் துரையாடியிருந்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


அடுத்த முறை நான்வரும்போது உங்கள் அனைவரினையும் சொந்த இடத்தில் சந்திப்பதற்கு விரும்புவதாக ஆணையாளர் கூறியதும், அங்கிருந்த மக்கள் அனைவரும் கைதட்டி கரகோசம் அளித்து ஆணையரின் கருத்தை வரவேற்றனர். மேலும் தமது இடங் களை விடுவிப்பதற்கு அரசிற்கு அழுத் தம் கொடுக்குமாறும் வேணடினர்.

என்னை நீங்கள் சந்திப்பதற்கு வந்ததற்கு முதலில் நான் நன்றியை தெரிவித்து கொள்கின்றேன். நான் பல நாடுகளிற்கு சென்றுள்ளேன். அங்கு பல தலைவர்கள், ஜனாதிபதி கள், பிரதமர்கள் ஆகியோரினை சந்தித்திருக்கின்றேன். ஆனால் இவர்களிலும் பார்க்க பாதிக்கப்பட்ட மக்களே முக்கியமானவர்கள்.

அவலங்களை இப்போதும் சந்தித்து கொண்டுள்ள மக்கள். இவர்கள் சார்பாக கதைப்பதே எனக்கு மிகவும் முக்கியமானது. அந்த வகையில் உங்களை சந்திப் பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். என்னைப்போல் பலர் இங்கு வந்து உங்கள் பிரச்சினைகளை சொலலி சொல்லி சலிப்படைந்து இருப்பீர் கள் என்று எனக்கு தெரியும்,

ஆனால்உங்களுடைய பிரச்சினை களை இந்த அரசாங்கத்திற்கும், அரச அதிகாரிகளுக்கும் எடுத்து சொலலி உங்கள் பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய கடமை எனக்கு இருக்கின்றது. அதனை நான் சரிவர செய்வேன். அடுத்த தடவை நான் வரும் போது பெரும்பாலும் உங்கள் இடத்தில் தான் உங்களை சந்திக்க வேண்டும் என விரும்பு கின்றேன் என்றார் அவர். (செ-4,9)

# யாழுக்கு புதிய இராணுவ தளபதி



யாழ்ப்பாணத்துக்கான புதிய இராணுவ கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜென ரல் மஹேஷ் சேனாநாயக்க நேற்று தனது கடமைகளை பொறுபேற் றுக்கொண்டுள்ளார்.

யாழ்பாண கட்டளைத்தளபதியாக பதவி வகித்து வந்த மேஜர்ஜெனரல் நந்தன உடவத்தை இராணுவ தலைமையகத்தின் நிறைவேற்று ஜெனரலாக நியமிக்கப்பட்டதை அடுத்து மஹேஷ்சேனாநாயக்க அப்பதவிக்கு நியமிக் கப்பட்டுள்ளார். (செ-12)

# காணாமல் போனோரின் விப...

செயிட் அல் ஹுசைனிடம் கை யளிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற் கொண்டு இலங்கை வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர், நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து வடக்கு மாகாண முதலமைச்சர் சிவிவிக் னேஸ்வரனை அவ ரது அலுவலகத்தில் காலை 10.30 மணி யளவில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே சந்திப்பில் ஈடுபட்டிருந்த முதலமைச்சர் மற்றும் அமைச்சர் களினால் மேற்படி காணாமல் ஆக்கப் பட்டோரின் விபரங்கள் கையளிக்கப் பட்டுள்ளன.

இதேவேளை, காணாமல் போனோ ரின் உறவுகளை சந்திப்பதற்கான ஏற் பாடுகள் முதலமைச்சர் அலுவலகத் திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

காணாமல் போனோர்களின் உற வினர்கள் 5 பேர் அவரை சந்தித்தார் கள் என்றும் அவர் தனது அலுவலர் ஒருவரை காணாமல் போனோரின் உறவினர்களில் ஒரு பகுதியினரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தார். மறு பகுதியினரில் சிலரை ஆணையாளரே சந்தித்தார்.

இதில் காணாமல் ஆக்கப்பட்ட உற வினர்கள் தரப்பில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் உட்பட பலரும் இருந்தனர்.

எனினும் ஆணையாளர் தம்மோடு சந்திப்பதற்கு இரண்டு நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டமையால், முழு மையாக தமது பிரச்சினைகளை கூற முடியாது போய்விட்டதாகவும் உற வினர்கள் தெரிவித்தனர்.

சந்திப்பின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சரினால் ஆணையாளரிடம் காணாமல் ஆக்கப்பட்ட நான்காயிரம் பேரினது விபரங்கள் கையளிக்கப் பட்டன.

இந்த சந்திப் பில் வடமாகாண விவசாயம் மற் றும் கூட்டுறவு துறை அமைச் சர் பொன்னுத் துரை ஐங்கர நேசன் மற்றும் மீன்பிடி போக்கு வரத்து அமைச் சர் பா.டெனீஸ் வரன் உட்பட வடமாகாண கல்வி அமைச் சர் த.குருகுல ராஜா ஆகியோர் உடனிருந்த னர். (செ-4,9)


## வேலைவாய்ப்பு

கணனி ரைப் செற்றிங் செய்யக்கூடியவர் தேவை

(முன் அனுபவம் இருத்தல் நன்று)

(3536) 0718474325

## ஆங்கில பயிலரங்கு

ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடிய அரச ஆசிரியர் ஒருவரால் நீங்கள் விரும்பும் இடத்தில் பரீட்சை மற்றும் பேச்சு ஆங்கில வகுப்புக்கள் குழு நிலையிலும், தனிப்பட்ட முறையிலும் யாழ், கிளிநொச்சி பகுதிகளில் கற்பிக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்களும் தனியார் நிறுவன ஊழியர்களும் அதிகம் பயன் பெற முடியும். (3537)

உடன் தொடர்பு : 0779927146

## யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றுக்கு தங்கி நின்று பணிபுரியக்கூடிய வேலையாள்கள் தேவை

- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- தேநீர், பழச்சாறு தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
- காசாளர் (பெண்கள்)
- களஞ்சிய உதவியாளர்
- உணவக மேற்பார்வையாளர் (ஆண்/பெண் முன்னனுபவம் தேவை)

பாதுகாப்பான வசதியான தங்குமிடம் மற்றும் சுத்தமான உணவு இலவசம்.

(3520)

தொடர்பு கொள்ளவும் : 0777911219

## மணி விழா மாண்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்



"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக் காருண்யன்"

உயர்திரு.

E.S.P. நாகரத்தினம்

அவர்களின்

கருணை உள்ளம் என்றும் நிலைத்திட,
கற்பகதரு போல் சேவைகள் தொடர்ந்திட,
இன்னும் பலகாலம் சிறப்புடன் வாழ்ந்திட,
வாழ்த்துகின்றோம்,
இறும்பூதெய்துகிறோம்.

கல்வி அபிவிருத்திக் குடி

கோப்பாய்க் கல்விக் கோட்டம்

(C-3646)


# ஐ.நா.ஆணை...

படை மற்றும் பொலிஸார் ஆணை யாளருக்கு பாதுகாப்பு வழங்கியி ருந்தனர்.

ஆணையாளர் சென்ற வீதிகள் இரு மருங்கிலும் ஐம்பது மீற்றர் இடைவெளியில் பொலிஸார் நிறுத் தப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டி ருந்தது.



இந்த பாதுகாப்பு நாட்டின் ஜனாதிபதிக்கு வழங்கும் பாதுகாப்பு போன்றே காணப்பட்டது. எனினும் பாதுகாப்பு கெடுபிடிகள் எவையும் இருக்கவில்லை.

ஊடகவியலாளர்கள் முதற் கொண்டு சாதாரண மக்கள் வரை அவரை சாதாரணமாக அணுக முடிந்தது. இதனால் மக்கள் தமது பிரச்சினைகளை ஆணையாளரி டம் துணிவுடன் கூறியிருந்தார்கள்.

சுன்னாகம் நலன்புரி முகாம் சென்ற போது கே.கே.எஸ்.வீதியின் இரு மருங்கிலும் பொலிஸார் நிறுத தப்பட்டிருந்தனர்.

இதனைவிட விசேட அதிரடிப் படையின் மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகளும் நேற் றையதினம் இடம்பெற்றன.

ஆணையாளர் தனது சந்திப்புக் களை நேற்று பிற்பகலுக்கிடையில் முடித்து கொண்டு நேற்று மாலையே உலங்கு வானூர்தி மூலம் திருகோண மலை பயணமானார். (செ-4)

# கவனயீர்ப்பை கண்ட...



ஆணையாளர், முன்னதாக வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத் திற்கு சென்றிருந்தார்.

முதலமைச்சருடனான சந்திப் பையடுத்து வடக்கு மாகாண ஆளு நருடன் கலந்துரையாடலை மேற் கொண்ட ஐ.நா. ஆணையாளர், அதன் பின்னர் யாழ். நல்லூர் முரு கன் ஆலயத்திற்கு வழிபாடாற்ற பயணமானார்.

அதேவேளை நல்லூர் ஆலய முன்றலில் காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவினர்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் முன்னெடுக் கப்பட்ட நிலையில் இருந்தது.

பாதுகாப்பு பிரிவினரோடு ஆலய முன்றலில் வந்திறங்கிய ஐ.நா. ஆணையாளர், பாதுகாப்பு குழுவி னரை விலத்தி வைத்துவிட்டு தனது வாகனத்திலிருந்து கீழிறங்கி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட் டிருந்த குழுவினரை பரிவுடன் சந் தித்தார்.

இதன்போது, கடத்தப்பட்ட எமது பிள்ளைகளை இராணுவ முகாம் களில் கண்டதாக காணாமல் ஆக் கப்பட்டவர்களின் பெற்றோர் ஐக் கிய நாடுகள் சபையின் மனிதவு ரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனிடம் முறையிட்டுள்ளனர்.

தற்போதும் தமது பிள்ளைகள் இராணுவ முகாம்களில் உயிரு டன் இருப்பதாக நம்பிக்கை தெரி வித்துள்ள உறவினர்கள்,

நீங்கள்தான் எங்களது பிள் ளைகளை மீட்டு தர வேண்டும் எனவும் மன்றாட்டமாக கோரியுள் ளனர்.

எங்கள் சொந்த இடங்களை யும், வீடுகளையும் இராணுவம் பிடித்து வைத்துள்ளதோடு, எங்கள் பிள்ளைகளையும் இராணுவம் பிடித்து வைத்துள்ளது. இதனால் நாங்கள் இன்றும் துன்பங்களுக்கு மத்தியிலேயே இருக்கின்றோம்.

எங்களது பிள்ளைகளை மீட்டு தருவதற்கு நீங்கள்தான் நட வடிக்கை எடுக்க வேண்டும். நாங் கள் எங்கள் பிள்ளைகளுக்காக காத்து இருப்போம். எங்கள் நிலங் கள் விடுவிக்கப்பட்டால் நாங்கள் மீள் குடியேறுவதற்கு தயாராகத்தான் உள்ளோம் எனத் தெரிவித்தனர்.

இதனை செவிமடுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உங்கள் பிரச்சினைகளை நான் நிச்சயம் இலங்கை அரசாங்கத் திடம் வலியுறுத்தி கூறுவேன் என தெரிவித்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். (செ-4)


## BASIC ENGLISH & SINHALA PERSONAL CLASSES & Translation

அடிப்படையிலிருந்து கிரமமான பாடங்கள், மொழிபெயர்ப்புப் பயிற்சிகள் ஊடாக இரு மொழிகளும் G.C.E (O/L) வரை கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை விலகியோர், அரச மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எவ் வயதினரும் எத் திகதியிலும் இணைந்து கொள்ளலாம்.

**மொழிபெயர்ப்பு வேலைகள்**

கடிதங்கள், ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், இணையத்தளக் குறிப்புக் கள் உட்பட்ட பிரத்தியேக மொழிபெயர்ப்பு வேலைகள் மூன்று மொழி களிலும் செய்து தரப்படும்.

T.SAGATHEVAN, B.A. London
Trilingual Tutor / Translator (PVT)
46,பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.No:-021-2223520/ 077-8210178

(3501)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.